பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

# முஹ்யித்தீன் ஆண்டகை

# சத்துரு சங்காரம்

இதில்

முஹ்யித்தீன் ஆண்டவர்களின் 11 திருநாமங்களும்

அதன் முஅக்காலத்துகளும்,

மேற்படி ஆண்டவர்களின் அந்தாதி மாலையும்,

ஞான சொர்க்கபதியும்,

ஷத்தாது சொர்க்கங் கட்டிய கிஸ்ஸாவும்,

ஈமான் ஹாஸிலாகும் இனிய முனாஜாத்தும்,

முறாது ஹாஸிலாகும் முனாஜாத்தும்

அடங்கியிருக்கின்றன.

2012

சென்னை, திருவல்லிக்கேணி,

**ஹாஜி எம்.எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

அவர்களால்

தங்களது

**ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்**

பதிப்பிக்கப்பட்டது

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

## முஹ்யித்தீன் ஆண்டவர்களின்

11-திருநாமங்களும்

## அதன் முஅக்காலத்துகளும்

யாஸையிது முஹ்யித்தீன் அம்றுல்லாஹி, யா நூருயில்
யாஷைகு முஹ்யித்தீன் பல்லுல்லாஹி, யா அத்வாயில்
யாஅவ்லியா முஹ்யித்தீன் அமானுல்லாஹி, யாஷர்த்தாயீல்
யாபாபா முஹ்யித்தீன் நூருல்லாஹி, யா கம்ரூயீல்
யாகவ்து முஹ்யித்தீன் குதுபுல்லாஹி, யா அஸ்மாயீல்
யாசுல்தான் முஹ்யித்தீன் ஸைபுல்லாஹி, யா அஜ்மாயீல்
யாகாஜா முஹ்யித்தீன் பர்மானுல்லாஹி, யாதர் தகாயீல்
யாமக்தூம் முஹ்யித்தீன் புர்ஹானுல்லாஹி, யா ரூகாயீல்
யாபாத்ஷா முஹ்யித்தீன் அர்ஷுல்லாஹி, யா மத்ரூயீல்
யாதர்வேஷ் முஹ்யித்தீன் ஹாயாத்துல்லாஹி, யா கத்ரூயீல்
யாபகீர் முஹ்யித்தீன் முஷாஹிதுல்லாஹி, யாஹூமாயீல்

### பாயிதா

இந்த பதினொரு திருநாமங்களையும் மனப் பாடமிட்டு, யாராவதொருவன் தன்னுடைய நாட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு துப்புரவாகத் தனித்து, ஓரிடத்தில் கிப்லாவை முன்னோக்கி உட்கார்ந்து கொண்டு ஓதி வருவானாகில், அவனுடைய ஹாஜத்துகளை யெல்லாம் அல்லாஹுத் தஆலா உடனே நிறைவேற்றி வைப்பான். முஜர்றபு—பரிசோதிக்கப்பட்டது.

இஃது

திருநெல்வேலி பொட்டல் புதூரையடுத்த
கிருஷ்ணாபுரத்தில் வசிக்கின்ற புண்ய குலத்துங்கரான
ஜயிலானி பக்கீரு லெப்பை ஆலிமவர்களா
லியற்றப்பட்டது.

# முஹ்யித்தீன் அந்தாதி மாலை

### காப்பு

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சீர்கொண்ட மக்கள் வாழும் திருநபி தமக்கன் பாக
நேர்கொண்ட போ ராகி நீணிலத் தொலி கட் கெல்லாம்
பேர்கொண்ட வாசாய் வந்த பெரும்புகழ் முஹ்யித்தீன்மே
லேர்கொண்ட மாலைபாட விறையவா, துணைசெய்வாயே. 1

ஆதியைப் புகழ்ந்து வள்ள லஹ்மது நபிக்கு மால்கள்
நீதிசே ரஸ்ஹா பிக்கு நிதம் ஸலவாத்துங் கூறிச்
சோதிசேர் முஹியித் தீன்மேற் றுலங்குமந்தாதி தன்னை
யோதவ யிலாஹி யென்னு முடையவா துணைசெய் வாயே. 2

### நூன் முகம்

உடையவ னுண்மைத் தூத ருயர்திரு நபிதன் செல்வி
சுடரொளி பாத்திமா தந்தோன்றல்த டம்மின் முன்னோர்
நடைபெறு மரபிற் றோன்றி நகர்பக் தாது தன்னில்
வடிவுற வாசாய் வாழும் வல்லப முஹ்யித்தீனே. 3

வல்லவ னருளா லும்போ டிமையவர் மத்த மெய்திச்
சொல்லுமன் னினோர் தம்மைத் தூயவ னெலிக் கன்பாக
நல்லிடம்விட் டங்கு தானே நல்குவீரென்னக் கூவி
யொல்லையி லுரைப்ப மேன்மை யுயர்புகழ் முஹ்யித்தீனே. 4

உயர்புகழ் ஷெய்கு ஹம்மா துமக்கையா தாற்றிற் றன்ன
வியனுறுங் கபுறு னக்கை விதனிக்க வுமைக்கண் டன்னோர்
செயல் பொறுத் தருள்வீ ரென்னச் சிந்தைவைத்திறைபாற் [கெஞ்சிச்
செயமுற வைபை நீக்குந் திருவளர் முஹ்யித்தீனே. 5

வளரிசை நபிகள் கோமான் முஹம்மது நபிநா ருள்ள
மனவுரு வுவகை பூத்தே யன்புடன் மிஃறாஜுக்கு
ஒளிர்பெற வேகும் போது கன்மலப் பதத்தைத் தோளாற்
ஒளிர் பெறத் தாங்கு மப்துல் காதிரே முஹ்யித்தீனே. 6

காதிரென்றருள்கொண் டோங்குங் கத்தனினொலிமாரெல்லாம்
பாதபங் கயத்தை யன்பாய்ப் பண்புடன் புயத்தின் மீதி
லாதர வாகத் தாங்கி யகமகிழ்ந் திசைந்து போற்றும்
நீதரே கவ்துல் அஃலம் நிச்சய முஹ்யித்தீனே. 7

நிச்சயப் புர்க்கான் வேத நிருபரெம் மிறசூல் மார்க்க
மெச்சுமோர் மனுவின் ரூப மெடுத்தெழி லழிந்தேனும்பா
லிச்சையிற் றிருந்து மென்ன விசைந்திட விருத்த லோடு
முச்சிதம் பெறச்செய் கோவே யொண்புகழ் முஹ்யித்தீனே. 8

ஒண்டரும் ஷாபி யிய்யி லுவப்பொடு மீருக்கு நாளிற்
கண்டரும் ஹன்ப லிய்யைக் கருத்துட னெடுத்தன்பாக
வண்டரு மிவைரண் டன்றி வலியமேன் மகாமி லானீர்
வெண்டரு காணுங் கைபீர் வேதசீர் முஹ்யித்தீனே. 9

வேதிய ரொருவர் தன்றோள்மீ துறும் பதங்கொள்வேனென்
றோதலா மூவர்க் குற்ற வொலித்தனம் பறிபோய்ப்பின்ன
ரோதனுந் தவ்பாத் தன்னைக் கூறிய ஸபபி னாலே
நீதினைப் பொறுத்தன் னோர்க்குச் செயம்புரி முஹ்யித்தீனே. 10

செயமொடுமொருவனேற் பாற்சென்றவன் றனித்தங்குற்றுப்
பயமுடன் றக்அத் தீராற் பணிந்துபின்னுமது நாமம்
வியனுட னீராத் துறாற் விடுத்தமே விளிப்பா னாகிற்
சுயமுடன் பிரத்தி செல்லுந் துய்யசீர் முஹ்யித்தீனே. 11

துய்யகல் லருள்ப வாரி தோய்ந்துநா டோறு மன்பர்
பையமன் றிடைவி டாம லணியுறு முமது பாதம்
பையவென் மனது கூர்ந்து பண்புடன் புகழ்ந்து போற்றி
செய்யநற் கிருபை செய்யுஞ் செம்மலே முஹ்யித்தீனே. 12

செம்மலே இஷாவுக் காகச் செய்திடு முழுவு கொண்டே
யம்முறு ஸுபுஹை நன்று யன்புட னுற்ப தாண்டு
செம்மையா யிறையை நாடிச் செயமுடன் வணக்கஞ் செய்த
செம்மணிச் சுடரே வாழ்வார் தேவரீர் முஹ்யித்தீனே. 13

தேவர்க ளேவல் பூண்ட திருவி றசூலுல்லாவுங்
காவல ரலியும் வந்தே கருணையுற் றுமது வாயி
லாவலா யுமிழ்ந்த பின்ன ரகமகிழ்ந் தறிவெல்லோர்க்குங்
காவுரை செய்த மேன்மை நாயக முஹ்யித்தீனே. 14



நாயக மான வன்ன னயமுடன் கெற்பந் தன்னிற்
சேயதா யிருந்து நாளிற் செய நபிகிலுறு வந்தே
வாயினு னன்மா ராயம் வழுத்திட வரிசை பெற்ற
தூயநபி நாயி பென்னுந் தோன்றலே முஹ்யித்தீனே. 15

தோன்றல்பெற் றில்லாமை யாலோர் தொகைநுஞ் சமூகம்
தோன்றல் பெற்றிடவே கேட்ப துப்புர வமுதவாயாற்வந்து
தோன்றல்பெற் றிடுவா யென்னச் சொற்றிய வாய்மை வண்ணத்
தோன்றல்பெற் றிறைஞ்சிப் போற்றுஞ் சுடர்மணி முஹ்யித்தீனே

சுடர்மணி யொளிவு வாய்ந்த தூயவ ரபூசஈதி
னிடமடுத் தன்னோர் கையாலினிதுறு யமுத முண்டு
திடந்தரு நஸீஹத் தேற்றுச் சிந்தையுந் தெளிவுற்றோங்கித்
தடஞ்செறி பகுதா நூர்வாழ் தருமதி முஹ்யித்தீனே. 17

மதியுறும் மணிகரேகி வருகெறி கள்வர் வந்து
முதலுடன் பலதுங்கொள்ளை முடித்திட கொடுத்தவன்னே
ரிதயமுன்னேற்ற போதே யிணையடிக் கபுக பாலே
நிதியுமற் றுளது மீட்டு நித்தில முஹ்யித்தீனே. 18

நித்தில நகையு ஞாஞ்சர் கேந்திர மடந்தைக் குற்ற
சித்திரரூபத்தை கண்டு சிலந்தியென் றெண்ணங்கொண்டு
வற்றிட வியற்வ வன்னுள் மறுகிவந் திறைஞ்சிக்கேட்ப
சித்தம்வைத் ததனை மீட்டுக் திருப்புகழ் முஹ்யித்தீனே. 19

திருப்பதந் தெரிசித் தோர்மன் றிரவியச் சுமைமீ ரைந்து
விருப்பமுற் றளிப்பத் தாங்கள் வெறுத்திடமறுத்துமன்னு
னுரைப்பதா லெடுத்தே யத்தை யுதிரமா யோடச் செய்தீர்
கருப்புகழ் பத்தா நூர்வாழ் காரண முஹ்யித்தீனே. 20

காரணக் குரிசிலான கவ்துநா யகமே செந்த
வாரண வென்பு தன்னை மனமகிழ் துவந்தன் பாகப்
பூரண வுடலோ டாவி பொருந்திய கூவச் செய்தீ
பூரணர்க் காசாய் வந்த ஆரிபே முஹ்யித்தீனே. 21

ஆரிபே மஃரி பாவுக் கப்புறந் தப்பு றந்தே
காரியாய்க் கலந்து நின்று கருத்தினை செலுத்துங்கோவே
சீரிய லனவை யாருஞ் செப்புதற் கடங்கா தும்மை
தாரியல் புயத்தி ரெங்கள் ஸாஹிபே முஹ்யித்தீனே. 22

ஸாஹிபே யடியே னுந்தஞ் சரணதா மரையை நாடித்
தேகமும் வாடி வாடிச் சிந்தையுள் வருந்தி நாளுந்
தாகமே பெருக்கமுற்றுத் தவிக்கின்ற வடியே னுக்குப்
பாககல் லருளே செய்வீர் பாக்கிய முஹ்யித்தீனே. 23

பாக்கியமுற் றோங்கி மிக்கப் பழனஞ்சூழ் பக்தா தாரி
லோக்கமுற் றிருந்து மேத வொன்முற சோசை நாளும்
நீக்கமுற்றிடாம லெங்குநிறைந்தெழுந் தொலிக் கோண்மை
யாக்கமுற் றுயற்று நீதியாண்டகை முஹ்யித்தீனே. 24

ஆண்டகை யடியன் வார்த்தை யணுவினும் பிசகி டாமற்
பூண்டிடு மதனை யும்மைப் புகழ்வதை யறிந்து கள்வர்
காண்டுளம் பதறி யன்பாய்க் கருத்துடன் தவ்பா வோதுந்
தூண்டிடாத் தீப மென்னத் துலங்கிடு முஹ்யித்தீனே. 25

துலங்கிய சமூகந் தன்னிற் சுருதியர் நூறு பேர்கள்
பெலங் கொளு மஸ்லா கேட்ப பெருமையுற் றடைந்தார்
கலங்கியே மறந்து நிற்பக்கண்டந்த மஸ்லாவோடு
கலங்கொளு மதின்ஜவாபு நவிற்றிய முஹ்யித்தீனே. 26

நவிலுமோர் வணிகர்க் கன்பாய் நன்மொழிகளையு நல்கி
யவர் தமக்கோது கின்ற வடலுறும்வித லோடுஞ்
சவுரியர் கரத்திற் கொள்ளுந் தனத்தையும் விளக்கிக் காக்கு
நவமணிச் சுடரே வுண்மை காதரே முஹ்யித்தீனே. 27

காதரே நமலா னித்தை நகருள்ளோர் கண்டிடாம
லோதுறும் மதையின் பிறை யுண்டிடா திருப்பக் கேட்டே
யாதலா லன்னோர்க் கெல்லா மகத்தனி லையந் தீர்த்து
போதுநல் விரதக்கோற்றூர் புண்ணிய முஹ்யித்தீனே. 28

புண்ணிய நபத்த வுத்திப் பொற்புறு கமலத் துள்ளே
தண்ணொழி லுறவே கர்ப்பந் தரித்தடைந் திருக்கு நாளில்
நண்ணுற வனையைக் கூளி தீண்டுதற் கடுத்த போதி
லொண்ணுறுங்கரத்தால் வீக்குமோங்கிலே முஹ்யித்தீனே. 29

மோங்கிய கப்ப லோடு மூவரியின் மாய்ந்தோன் றன்னைப்
பாங்குடனனை தன் பாலிற் பண்புடன் மீட்டுங் கோவே
தீங்கணு காமற் காத்துச் சிந்தைவைத் திரண வாழ்வை
நீங்கிடா தருளிச் செய்வீர் நீதரே முஹ்யித்தீனே. 30

நீதமே நிறைந்த வேத நெறிமுறை யதனை நாளுங்
கோதறச் செலுத்துங் கோண்மைக் குறுநபி தமக்கன்பான
சோதிசேர் சாயி பாகத் தோன்றிய தூயமேரோ
மாதவப் பொருளே யெங்கள் மன்னரே முஹ்யித்தீனே. 31



மன்னவர்க் கரசே நாளு மாதவர்க் கரசே வாழும்
பொன்னவர்க் கரசே யும்பர் போற்றிடு மரசே யென்ற
னின்னல்தீர்த் திரண வாழ்வை யிதயமுற் றருளிச்செய்வீர்
சென்னல்சோ பக்தா தூர்வாழ் செருயதி முஹ்யித்தீனே. 32

செமழுதி கதிரு மூர்க்கை நிகைதரி புவிவானோடு
மெழுதுகோல் வேதி கையு மியல்குரி சர்ஷு யாவு
மெழிலுறப் படைத்தே யாளு மிறையவன் றனக்கன் பான
பழுதறு கலீபா வென்னும் பாத்திய முஹ்யித்தீனே. 33

பாத்திப கவ்தே யிந்தப் பாருள்ளோர் காணச்சேணங்
காற்றோடு சிந்தி வீழக் கருணையுற் றதனைப் பின்னுஞ்
சேர்த்துயர் நிவர்ந்து செல்லச் செயமொடு பொருந்தி விட்டீர்
சேத்திர மணியே வன்மை நிமலரே முஹ்யித்தீனே. 34

நிமலரே வலிமை நோக்க நினைத்துவந் திடுமோர் ஷெய்கு
தமக்குறு கொடியே வேங்கை தன்வெயி னெழுமைபூண்ட
ஞமலிசென் றதனைக் கொன்ற நற்றிரங் கண்ட னோர்து
மழுதொக்கு மலர்த்தாள் போற்று ததிபரே முஹ்யித்தீனே. 35

அதிர்திரு மதுரா ஸந்தை யடுத்துமா தவர்கள் சூழ்ந்தே
யதிகநல் ஹதீத் கேட்கு மவர்களி லொருவ ருக்குத்
தனியுள மலபா தைக்காய்த் தாங்கிடாச் சமைய மன்னோர்
துதிசெய வுதவ நல்குஞ் சுருதிசேர் முஹ்யித்தீனே. 36

சுருதி னொலிய ரூது துலங்கிய சமூகந் தன்னிற்
றெரிதர நாட்கள் வாரந் திங்களுந் திரண்டு வந்து
தருதிரை யுவர்சூழ் பூமி தனிலுறுங் கரும மெல்லாம்
வுரிவதா யெடுத்துக் கூறும் வேந்தரே முஹ்யித்தீனே. 37

வேந்தரே கண்டுஞ் சாது விரதமே யீரா ரூண்டு
சாந்தமுற் றிடைவி டாதற் றகுதியாய்க் கோற்ற கோவே
பாந்தள்வந் திடுக்கஞ் செய்யப் பயந்துளம் பேசி யாதந்
காய்ந்தநல் லறிவோ டுற்ற ஆலிமே முஹ்யித்தீனே. 38

ஆலிமே கவ்துல் அஃல மானவோர் நாமந்தன்னை
மூலமு முடிவு மில்லான் முகத்தபாய்க் கூறுஞ் சத்தம்
பாலினிற் றிடமாய் வந்து பண்புறச் செவியிற் கேட்குஞ்
சீலசர்க் குருவே வள்ளல்செய்யிதே முஹ்யித்தீனே. 39

செய்யிதே மூலக்க பென்னுஞ் சிறப்புறு நாமந்தன்னைத்
துய்யநன் னபியின் மார்க்கஞ் சுகமொடு மெதிரிற்சொன்ன
னையற வதனை யிந்த வள்ளல் நாயகமே நாளும்
வையமும் வானும் போற்று மகாதவ முஹ்யித்தீனே. 40

மகாதவ மிகவே செய்யு மறையவர் தங்கட் கெல்லாஞ்
சிகாமணி யாகவந்த செய்யிதே யொலியுல்லாவே
மகாமஃ தேழிலுற்ற மகத்துவ முடனே வல்லோன்
லிகாவுடன் கலந்து நிற்கு நின்னைய முஹ்யித்தினே. 41

நின்னைய வொலிமார் சேவ னிகழ்த்தும்வாய் மூடிக் குன்று
மொண்ணுறு முமது சேவ லொடுக்க காளளவுகற்று
யெண்ணமின் றிடைவி டாம லிப்புவி சிறப்புற்றோங்க
வண்ணமாய்க் கூவு நிற்கு மகிபரே முஹ்யித்தினே. 42

மகிபரே யொருவ னும்பால் மன் றுறு காட்ட மெல்லாம்
பகருபு கேட்பா னென்னிற் பழுதன்றி பெருவானுண்மைச்
செகமெலாம் புகழீ ருங்கள் சிக்கை வைத்தென திரப்பை
மகிழ்கொளக் கிருபை செய்வீர் வள்ளலே முஹ்யித்தினே. 43

வள்ளலும் மடியார் தம்மின் மனமகிழ்க் கியல்பாய்
கொள்வீரென் றிசைத்தே னிக்காட்கூறுகா யடியேறன்னை
தள்ளிடா வண்ணங் கூட்டித் தயவுட னிரக்கிக் காத்தே
யுள்ளம்வைத்து துவதா செய்வீரெண்ணலர் முஹ்யித்தினே. 44

ஒண்ணல ரெவர்க்கு மேலா முயர்திரு நபிக்குமன்னோர்
புண்ணிய ஆள்க ளுக்கும் புகழுங்ஹாபி மார்க்கு
மெண்ணறும் ஸலவாத்தோதி யிடை விடாதுரைப்பாயன்பா
யண்ணலே லடியேன் மீதுவருள் செய் முஹ்யித்தினே. 45

அருள்வள ரலிபு தால்மீ மக்காத் தொண்ண மட்டாய்த்
திருவளர் முஹ்யித்தீன் மேற் செழுங்கிருஷ்ண புரத்தின்மேவு
மருவளர் மக்தூ மீன்ற மகன் ஜயிலானி பக்கீர்
பொருள்வளர் மாலை தன்னைப் புக்திபூத் துரைத்தா னுமுன். 46

முஹ்யித்தீன் அந்தாதி மாலை

முற்றுப் பெற்றது.

---

பிஸ்மில்லாஹி அலா கியத்தி

சுல்தான் அப்துல் காதிர்

என்னும்


# முஹ்யித்தீன் ஆண்டகையவர்கள்

# சத்துரு சங்காரம்

திசை நாலுங்காட்ட — அதற்குக் கவி

மூத்திரையாச்சுது முஹ்யித்தினென்ற சொல் கெஞ்சகத்தே
பத்திரை யாச்சுது பரமானந்தமாச்சுது பசாசுகளை மயக்கும்
அத்திர மாச்சுது தாரதல மூல்வும் பயல்கள் தனக்கு
கைத்திர மாச்சுது முஹ்யித்தி னட்சாத் திசைநாலுங் கட்டுதற்கே

இதற்குச் சக்கரம்





இதன் பாயிதா

அதாவது:— இராத்திரி காலங்களில் தனித்து யாராவது போகுங்காலத்தில் இந்தப் பாட்டை மூணுதரம் ஓதி நெஞ்சில் ஊதிக்கொண்டு போனல் உங்களுடைய கண்ணுக்கு யாதொன்றும் தோன்றமாட்டாது. பிசாசு, பூச்சி, பல இனங்களாகியவைகள் யாவற்றும் உங்கள் முன் நிற்க மாட்டாது.

### சத்துரு அற — அதற்குக் கவி

கட்டிய கட்டுரை முன்னரு ளாகிய மூச்சுடரின்
கட்டுறை யாகி வளர் கத்தம அட்சரம் தாகியெழும்
பட்டிது மட்டு தென்றே ஆ ஈ ஊ வென்றட்சர
முட்டிடப் பாய்ந்து என்சத்துரு ரிணக்குடல் வாங்கு முஹையிதீ
[னென் றட்சரத்தால்

### இதற்குச் சக்கரம்



### இதன் பாயிதா

இந்தப் பாட்டை நீங்கள் துப்புரவான வெள்ளைத் துணி உடுத்தி, வெள்ளைத்துணி விரித்து, பன்னீருஞ் சந்தனமும் கரைத்து தெளித்து ஊதுவத்தி கொளுத்தி வைத்து மேற்படி பாட்டை 1128-தரம் படிக்க ரஹ்மான் கிருபையால் உங்களுடைய ஹாஜத்து உடனே நிறைவேறும்.

### சூனியம் பில்லி முறிய — அதற்குக் கவி

வஞ்ச மகற்றி வழியே வல் மாற்றி வரும் பில்லியை
அஞ்சப் பிடித்து அறைக்கு னடைத்தே அதின் குபிரின்
நெஞ்சைப் பிளந்து, நிணக்குடல் வாங்கி நெரி நெரித்து
பஞ்சாய்ப் பறக்கும் பரியந்த மாட்டி வைப்பீர் முஹையிதீனென்ற
[நாமம் கொண்டே

### இதற்குச் சக்கரம்

| | |
|---|---|
| ந | ம |
| ந | ம |



### இதன் பாயிதா

இந்தப் பாட்டை 1128-தரம், ஊதுவத்தி கொளுத்தி வைத்துக் கொண்டு படிக்க சித்தியாகிவிடும். பின்னடி யாருக்காவது பேய், பிசாசு, வஞ்சனை, பில்லி, சூனியம், ஏவல் இதுகள் இருந்த பேர்களுக்கு அவர்களை முன்னே வைத்து, சாம்பிராணி புகைத்து மேற்படி பாட்டைப் படிக்கப் படிக்க எப்பேர்க்கொத்த பேய்களானாலும் உடனே ஆடும். கதறிக் கதறி நான் போய்விடுகிறேனென்று சொல்லும். புதுக்கலயத்தில் தண்ணீர் வைத்து மேற்படி பாட்டை ஏழுதரம் படித்து ஓதி ஊதி மேற்படி தண்ணீரை 3-தரம் முகத்திலடித்து 3-தரம் குடிக்க கொடுக்கவும், இப்படி 3-நாள் செய்யவும். எப்பேர் கொத்த பேய், பில்லி வஞ்சனை, சூன்யம் இதுகளெல்லாம் விலகிப் போகும்.

### மாத்தான் நாவடக்க — அதற்குக் கவி

பொல்லாத வஞ்சன் வகையான சூத்திர மொன்றுமறியான்
நில்லாத கர்மி யமரிச் செய்தானவ னீச னல்லோ
நல்லா ரதனைப் புகழ்நா யகனைத் தொழும் நானடியேன்
வல்லான் கிருபை முகையதீனென் றட்சர வாளுமுண்டே

### இதற்குச் சக்கரம்




### இதன் பாயிதா

அதாவது:— மேற்படி சக்கரத்தை வெள்ளித் தகட்டிலெழுதி ஊதுவத்தி கொளுத்தி வைத்து, 212-தரம் படித்து மேற்படி தகட்டை மடித்து மடியில் வைத்துக் கொண்டு, உங்களுடைய மாற்றான் இருக்கும் இடம் போனால் ரஹ்மான் கிருபையால் உடனே உங்களிடத்தில் வணங்கிப் பேசுவார்கள்.

## வெடிசத்து மறுக்க — அதற்குக் கவி

உண்டே யெனது உரையாணி பொட்டுரை ஊக்கமலம்
கண்டே கடுவினை யாகிய காட்டம் கடுவெளியில்
கொண்டே வுருகுப்பி பீரங்கி வாங்கி யிழுத்து வைத்து
குண்டே முஹையிதீ னட்சரப் பொறி பட்டுத் தீய்ந்ததே.


இதற்குச் சக்கரம்



## பிசாசு மாறல் — அதற்குக் கவி

தீய்ந்தது குண்டு தெறித்தது சத்துரு தேகந் தன்னில்
மூய்ந்தது போக்குமற்றேயிப்பேய்களைப் போல்கொக்கரித்து
ஈய்ந்து யென் குரு காதர் முஹம்மது ஈமெழுத்தும்
ஆய்ந்துருக் கொண்டென்னை ஆதரிப்பீர் முஹையிதினென்றட்சா
[ஆசையிலே

இதற்குச் சக்கரம்




இதன் பாயிதா

அதாவது:— மேற்படி சக்கரத்தை தாம்பிர தகட்டி லெழுதி மல்லிகைப்பூ போட்டு சாம்பிராணி புகைத்து ஊதுவத்தி கொளுத்தி வைத்து மேற்படி சக்கரத்தை முன்னே வைத்து 1228-தரம் படித்து தகட்டை மடித்து வெள்ளி தாயித்துக்குள் அடைக்க பெண்களுக்கு போகாத பிசாசுகளா பிடித்திருந்தால் தாயித்தைக் கழுத்தில் போட உடனே போய்விடும்.



## ஏவல் மாற்ற — அதற்குக் கவி

ஆசையடங்கும் அலங்கார வட்டத்தி னவ் வெழுத்தை
பூசை இட்டேவுலி காகத்தைப் பூட்டி யுணர்ந்தி ருந்தேன்
ஓசை யிட்டேவுலி குத்தேவல் தன்னை மிகுத்த றுத்து
பாச முத்தேவலை மாத்திவைப்பீர் முஹையிதீ னென்ற வாசியிலே

இதற்குச் சக்கரம்





இதன் பாயிதா

அதாவது:— மேற்படி சக்கரத்தை ஈயத் தகட்டி லெழுதி சாம்பிராணி புகைத்து பானங்கள் கரைத்து வைத்து எலுமிச்சம்பழம் 3-வைத்து ஊதுவத்தி கொளுத்தி மேற்படி பாட்டை 112-தரம் படித்து தகட்டை மடித்து மெழுகு துண்டில் பொதிந்து பெண்களுக்காவது ஆண்களுக்காவது 'ஏவல்' செய்திருந்தால் பெண்களுக்குக் கழுத்தில் போடவும், ஆண்களுக்கு இடுப்பில் கட்டவும். புது கலயத்தில் தண்ணீர் வைத்து மூன்று காலைக்கு ஒவ்வொரு காலைக்கு 11-தரம் தண்ணீரில் ஓதி ஊதி அவர்களுக்கு குடிக்கக் கொடுக்கவும். ரஹ்மான் கிருபையால் உடனே மாறிவிடும்.

## எமனை நிறுத்த — அதற்குக் கவி

வாசியை வாங்கி வடுகலை யேற்றி வகாரெழுதில்
ஊசியை காட்டி உயிர் கிலை பூட்டி உயிர்த்தெழுந்த
காசிக்கு மேலே கடுவனை காட்டத்தைப் பூசித்துயான்
தேசிக்கும் வாசின முஹையிதீன் சாஹிபு பூதியனே.


### இதற்குச் சக்கரம்



### எதிர் மாறல் — அதற்குக் கவி

பூதிய வசம்பு காரகத்தும் ஆனந்த ஙாயகமே
ஆதியே யுன்னை யறியாத பேரை யறுத்தறுத்து
மாதிய யன்னி மகருச கன்னியுன் அஞ்செழுத்தை
ஆதிய சூட்சமு ஹையதினென் றட்சர உத்தையமே.


### இதற்குச் சக்கரம்



### உடல் பிரிவு — அதற்குக் கவி

உத்தைய முத்தி உறவா யெழுத்தது பஞ்சரைக்குள்
பத்திரை ஞானப் பரம்பொரு ளாகிய பாசறைக்குள்
எத்திய காலம் மெழுத்தொரு லாமு ஹே மீமுடனே
முத்திரை யாகுமுஹைய தினென் றட்சரமூலீமனோன்மணியே.

### இதற்குச் சக்கரம்






### துஷ்ட தேவதை யடக்க — அதற்குக் கவி

மூல ஆதார முனையது லட்டமு தாரிக்குள்ளே
கோல தேவதை கணபதி கிற்குமா ணிக்கவண்ணம்
மாலைச் செப்புறச் சம்பூமயில் கிலை அத்தி விருட்சமல்லோ
சால வாங்குரு முஹையிதின் சாகிப்பை கோருவனே.

### இதற்குச் சக்கரம்




### இதன் பாயிதா

எப்பேர்க்கொத்த துஷ்ட தேவதையாயிருந்து, யாருக்கும் அடங்காமல் பிடித்திருந்தால் 3-நாளைக்கு அவர்களை முன்னி றுத்தி மேற்படி சக்கரத்தை வெள்ளிப் பிங்கானில் எழுதி ஒவ் வொரு நாளைக்கும் 2-தரம் படித்து தண்ணீரை ஊத்திக் கரைத் துக் கொடுக்க தேவதை அடங்கி உடனே போய்விடும்.

### சிந்து — அதற்குக் கவி

கோவணி சித்து குருமணி முத்துக் குழந்தையல்லோ
பாவணி பச்சை பவள நிறம் வெள்ளை பலபலத்து
மாவணி கச்சு மனோன்மணிப் பச்சை மாரகதமாம்
பூவணி பிச்சி முஹையதீன் சாஹிபு பூபதியே

### இதற்குச் சக்கரம்




### இதன் பாயிதா

நீங்கள் யாராவது குளித்து வெள்ளை வஸ்திரம் தலையில் கட்டி வெள்ளைத் துணி விரித்து பன்னீருஞ் சந்தனமுங் கரைத்து அதின்மேற் றெளித்து ஊதுவத்தி கொழுத்தி மேற்கு முகமாக விருந்து மேற்படி பாட்டை 1128-தரம் படிக்க பச்சை வடம் தரித்து முஹையிதீன் அப்துல்காதிர் நாயகம் அவர்கள் குழந்தை பிள்ளையாக உங்களிடத்தில் வருவார்கள். அவர்களால் உங்களுக்கு அநேகங் காட்சிகள் கிடைக்கும்.

### வாலை வரவு — அதற்குக் கவி

பூபதி அதிபதி பரணி கார்த்திகையு ரோகணியும்
மாபதி வச்ச கடத்து மனோன்மணி நாயமே
ஆபதி ராசியில் மேட மிடபக் தனைவளைக்தே
வாபதி நாயக முஹையிதீன் சாஹிபு வல்லபமே.



### இதன் பாயிதா


மேற்படி சக்கரத்தை பொன் தகட்டில் எழுதி சாம்பிராணி புகைத்து சந்தனம் பூசி தகட்டை முன்னே வைத்து மேற்படி பாட்டை 1128-தரம் படிக்க, வாலைப்பெண் வடிவமாக மகா அழகு சௌந்தரியத்துடனே உங்கள் முன்னே வருவார்கள்; நீங்கள் கண்டால் மருண்டிட வேண்டாம். அந்தப் பெண் நாகரீகமான வார்த்தைகளோடு நீங்கள் கேட்கும் காரியங்களை நடத்தித் தரும்.

### போகுங் காரியம் வெற்றியாக — அதற்குக் கவி

வல்லமை மந்திரம் ஓங்கார மிட்டு உலாவரைக்குள்
செல்ல வளரும் திருக்குரு ஆனந்தத் தீபமணி
இல்லம் நிறைந்து இலங்குது வாரங்க ளெங்குமுட்டி
சொல்லும் நடங்காது முஹையிதீன் காரணச் சூட்சியமே.



### இதற்குச் சக்கரம்




### இதன் பாயிதா

மேற்படி சக்கரத்தை வெள்ளித் தகட்டில் எழுதி மல்லிகைப்பூ மேலே வைத்து, நீங்கள் துப்புரவாக குளித்து முழுகி ஊதுவத்தி கொளுத்தி வைத்து, மேற்படி பாட்டை 1128-தரம் படித்து மடித்து மடியில் வைத்துக் கொண்டு போனால், ரஹ்மான் கிருபையால் நீங்கள் போகுங் காரியம் விருத்தியாகும்; யாராவது சந்தேகித்தால் பாவியாய்ப் போய் விடுவான்.

### தலை திருப்ப—அதற்குக் கவி

காரண மாகிய எதிர்வீடு வாசற்குங் கண்மணியே
பூரண மாதி பூத்த நிலைமுகம் பூபதியே
வாரண மஞ்சரை அட்சர மாறித் தலைதிருப்பத்
தாரணி முத்து முஹையதீ னாண்டவர் தாணிமுத்தே.

### இதற்குச் சக்கரம்



### இதன் பாயிதா


உங்களுக்கு யாருக்காவது ரொம்பவும் இக்கட்டான காரியங்களாக இருந்தால் மேற்படி சக்கரத்தை தாம்பிரத் தகட்டி

லெழுதி மல்லிகைப்பூ வைத்து பானக்கம் கரைத்து வைத்து பன்னீரும் சந்தனமும் தெளித்து ஊதுவத்தி கொளுத்தி மேற்படி பாட்டை 1128-தரம் படித்து மேற்படி தகட்டை மடித்து நூல் கயிற்றால் கட்டி இடுப்பில் போட்டுக் கொண்டு போனால், ரஹ்மான் கிருபையால் அந்த இக்கட்டுகளெல்லாம் உடனே தீர்ந்து விடும். யாராவது சந்தேகித்தால் முனாபிக் காவான். (ஊனூதுபில்லாஹி மின்ஹா)

## ஈட்டிக்குத்து விலக—அதற்குக் கவி

முத்தனி பிட்டு முதகாளி களிட்டு முச்சுடரின்
பத்தினி வைத்து நடு விட்டுப் பார்வையை விட்டு
குத்திட்டுக் கூவிட்டுக் கூசா திட்டமான பீடமதில்
சத்திட் டிருக்கு முஹையதீன் காட்சி தருமெழுத்தே

## இதற்குச் சக்கரம்



## இதன் பாயிதா

மேற்படி சக்கரத்தை தங்கத் தகட்டிலெழுதி வெள்ளைத் துணி விரித்து அதன்மேல் தகட்டை வைத்து மல்லிகைப்பூ போட்டு ஊதுவத்தி கொளுத்தி துப்புரவாக குளித்து முழுகி துப்புரவுடனே வந்திருந்து மேற்படி பாட்டை 320-தரம் படித்து மேற்படி தகட்டை மடித்து வெள்ளித்தாயித்துக்குள் அடைத்து நீங்கள் இடுப்புகளில் போட்டிருந்தால் உங்களுக்குத் தெரியாமல் பின் காட்டி கத்தியால் குத்தினாலுஞ் சரி அல்லது கொம்பினா




லடித்தாலும் கல்லெறிந்தாலும் உங்கள் மேல் படாது. கத்தியினால் குத்தினாலும் கொம்பினாலடித்தாலும் கல்லினாலெறிந்தாலும் அவர்கள் கை நின்றுவிடும். மறுபடியும் அந்த அடிகளெல்லாம் அவர்களுக்கே படும்.

## குருவணக்கம்—அதற்குக் கவி

கருவெழுத் தாகிய ஒன்றுக்குங்காணிக்கை காலெழுத்துணை
திருவெழுத் தாகிய திருச்சரப் பன்னி ரெவ்வெழுத்தை
குருவெழுத்தான முஹம்மதுர் றஸூலுல்லாஹி அதுகுந்து
உருவெழுத்தான முஹையதீனென் றட்சரமுள்ளெழுத்தே.

## இதற்குச் சக்கரம்



## இதன் பாயிதா

சகலமான படைப்புகளும் உண்டாகு முன்னே, தொனியென்ற சத்தம் ஒன்று முழங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் அந்தச் சப்தத்தை ரஹ்மான் உறுத்துப் பார்த்தான்; அந்த சப்தத்துக்குள்ளிருந்து ஒரு கலம் வெளியானது. அந்தக் கலத்தைப் பார்த்து ரஹ்மான், ‘லவ்ஹுல் மஹ்பூல்’ என்னும் பலகையிலெழுதும்படியாக கலத்தைப் பற்றி உறுத்தினான். அந்த கலம் எழுதவில்லை. மறுபடியும் கலத்தைப் பார்த்து ரஹ்மான் எழுதும்படி உறுத்தினான். அப்பவும் எழுதவில்லை. ஏன் எழுதாமலிருந்தாய்? எழுதவில்லை, என்று மூன்று தரம் எழுதும்படிக்கு உறுத்தியும் எழுதவில்லை. அப்போது ரஹ்மானுக்குக் கோபமுண்டாகி ‘ஹும்’ என்று உறுத்தினான். உடனே அந்தக் கலம் சக்குப் பிளந்து ரஹ்மான் எண்ணிய எண்ணமெல்

லாம் ஆதியோடந்தம் வரையில் 'லவ்ஹுல் மஹ்பூல்' என்னும் பலகையில் எழுதி விட்டது. பிறகு ரஹ்மானுக்குச் சந்தோஷ முண்டாகி, மஹ்பூல் ஆலம் என்று பேர் கொடுத்தான். அந்தக் கலமானது முஹையதீன் ஆண்டவர்களாக இருக்கும். இன்னும் அர்ஷு, குறுசு, சொர்க்கம், நரகம், வானம், பூமி, கடல், நதி, பாதாளம் இவைகளெல்லாம், 'ஹிம்' எனப்பட்ட ஓரெழுத்தில் உறுக்குதலினால்தான் நிற்கின்றது. இதனால்தான் எல்லா அர்வாஹுகளும் உண்டானது. இன்னும் இந்த எழுத்துக்கு விபரம் சொல்லுகிறோம். அதாவது அல்ஹம்து ஸூரத்தில் இரண்டிடங்களில் 'அலைஹிம்' என்று வருகிறது. அதை நீங்கள் உணர்ந்து பாருங்கள். இன்னும் இந்த எழுத்துக்கு விபரம் சொல்லுகிறோம். அதாவது ஒரு பெரிய பாரமான கல்லைத் தூக்க வேண்டுமானால் 'ஹிம்' என்று உறுத்தித் தூக்கினால் தான் அதைத் தூக்க முடியும், இன்னும் குளவி தண்ணீர் கரையில் மண்ணெடுத்து விட்டு மரங்களில் கூடுகட்டி ஆவாரச் செடியிலிருக்கும் பச்சைப் புழுவைக் கொண்டு வந்து கூட்டுக்குள் வைத்து வாயை மூடி முன்னின்று 'ஹிம் ஹிம்' மென்று ஒரே உறுத்துதலாக முப்பத்தொன்பது நாள் உறுத்தி நாற்பதாம் நாள் கூட்டின் வாயைத் திறக்க மேற்படி புழு முன்னிருந்த ரூபம் மாறி சிறகு, கொடுக்கு முதலியவைகளுடன், அந்த குளவியைப் போலுண்டாகி, அதனுடன் கூடப் பறந்து விடுகிறது. இது யாவருக்கும் தெரிந்த திருஷ்டாந்தம். இப்படி 'ஹிம்' என்று இறுக்குதலினால் தான் தவத்தைக் காணக்கூடும். ஆகையால் நீங்கள் பூலோகத்திலிருந்து மவுத்தாகி, உங்களை கப்று அறையிலடக்கித் திரும்பி எழுதி வருவதற்கு முன், ஒரு ஜன்னல் வழியைக் கண்டு நீங்கள் நடந்து போனால் உங்களை முன் சொல்லிய தோட்டத்தில் கொண்டு போய் விடும். அதில் நீங்கள் போயிருந்து வாசஞ் செய்து மகா மதுரமுள்ள ருசிகளை யருந்தி, மரங்களிலே கிடைக்கும் அநேக கனிவர்க்கங்களால் பசியாறி, பாலாறு தேனாறு மதுவாறு தண்ணீர்களையும் குடித்து மகா சந்தோஷத்துடன் எந்நேரமும் அங்குள்ள வீடுகள் தோறும் இருக்கும் அன்ன ஊஞ்சல்களில் இருந்து ஆடிக் கொண்டிருப்பீர்கள். இந்த வழியைப் பெறாதபேர்கள் எப்போதும் நரக வேதனைக்கு ஆளாவார்கள். மேலும் மேற் சொன்ன நல்வழியை



யடைந்த பேர்களுக்கு இன்னும் இதற்கு மேலான சுவர்க்க லோகப் பதவியுங் கொடுக்கப்படும்.


அப்போது நீங்கள் 'ஹவ்லுல் கவ்தர்' என்கிற ஆற்றுத் தண்ணீரில் மூழ்கி, 'முத்தலிஹா' யென்கிற பட்டுக்களையும் உடுத்தி, சுவர்க்கலோகத்து வாசல் முன்னிலை இருக்கும் 'சித்றத் தல் முன்தஹா' வென்ற மரத்து இலையை நீங்கள் தலையில் கிரீடங்களாகப் போட்டு சுவர்க்கலோகத்து வாகனங்களேறி, சுவர்க்கலோகம் புகுவீர்கள். நீங்களும் 'ஹூருல்ஈன்' பெண்களுடன் சந்தோஷங்களா யிருக்கும் போது, உங்கள் பெண்ஜாதிமார்களை ரஹ்மான் உங்களிடம் ஜோடி ஜோடிகளாகச் சேர்த்து வைப்பான். அப்போது உங்களுடைய பெண்களை நீங்கள் விரும்பாமலிருப்பீர்கள். அப்போது அந்தப் பெண்கள் ரொம்பவும் அழுது சலித்து ரஹ்மானிடத்தில் துஆ கேட்பார்கள்.

“ரஹ்மானே, எங்களுக்கு அழகு வடிவு ஒளிவு இல்லையென்று . எங்களுடைய புருஷன்மார்கள், எங்களைக் கொஞ்சமாவது விரும்பாமல், எந்நேரமும் அந்த 'ஹூருல்ஈன்' பெண்கள் கூடச் சந்தோஷமாக இருக்கிறார்கள். ரஹ்மானே, எங்களை இந்த வடிவை விட்டு நீக்கி, ரொம்பவும் அழகு வடிவுகளாகச் செய்ய வேண்டும்'' என்று துஆக் கேட்பார்கள். உடனே ரஹ்மான், அவர்கள் முன்னிருந்த வடிவை விட்டு நீக்கி, சுவர்க்கலோகத்துக்கு ஹூருல்ஈன் பெண்களிலும் நூறு பங்கு அதிகமான அழகு சௌந்தரியங்களாக்கி விடுவான். இவர்களை அந்தந்த புருஷன்மார்கள் கண்டவுடனே, இவர்கள் மேல் ஆசையாகி, இந்தப் பெண்களை ரொம்பவும் சந்தோஷமாக்கி வைத்திருப்பார்கள். இவை கண்டு ஹூருல்ஈன் பெண்கள், இந்தப் பெண்களிடம் தாழ்மையாக நடந்து, இவர்கள் சொன்ன பணிவிடைகளைச் செய்துக் கொண்டிருப்பார்கள்.

## திசைக்கட்டு—அதற்குக் கவி

உன்னை தரித்து உலாவிய அட்சர மாறுயிதம்
என்னன வாகுலும் விலகா திலா மணி யெவ்விடமும்
வன்னெட் டுத்திக்கும் வளர்பதினாறு கோண வாசமிட்டு
பன்னெட் டுக்கோல முஹையதீனென் றட்சாக் கொடுகோபமே

### இதற்குச் சக்கரம்




### இதன் பாயிதா

புலி, கரடி, யானை, சிங்கம், யாளி, குழிமாடு, இன்னும் அனேக துஷ்ட மிருகங்கள் இருக்கும் காடுகளுக்கு நீங்கள் யாராவது, போகவேண்டு மென்றால், வெள்ளைப் புது வோட்டில் மேற்படி சக்கரத்தை பலகை யெழுதுஞ் சாயங் கொண்டெழுதி, இப்படி நாலுவோட்டில் எழுதி ஒவ்வொரு வோட்டிற்கு நாலு தரம் மேற்படி பாட்டைப் படித்து ஊதி, காடுகளுக்கு போகும்போது மேற்படி நான்கு ஓட்டை எடுத்துக் கொண்டு நாலு திக்கிலும் எறிந்தால் யாதொரு மிருகமும் கண்ணுக்குத் தென்படாது; காடு கட்டிப்போகும்.

### பிசாசை தாவிக்க—அதற்குக் கவி

கோவிச் சுழிமுனை முச்சடர பார்வை கொடூரங் கொண்டு
ராபிக்கு மந்திரம் நகாரமென் றதைநம்பி நித்தம்
பாவிக்க வந்த பிசாசுகள் தேவுகள் சின்படையும்
தாவிக்க மந்திர முஹையதினென் றட்சரம் பதினெட்டுமே

### இதற்குச் சக்கரம்






### இதன் பாயிதா

பெண் பிள்ளைக்காவது, ஆண் பிள்ளைக்காவது துஷ்டமான பிசாசுகள் பிடித்திருந்தால், சக்கரத்தை செல்லுமாவு ரொட்டியில் பலகை யெழுதுஞ் சாயங் கொண்டெழுதி, சம்பிராணி புகைத்து 123-தரம் மேற்படி பாட்டைப் படித்து, அவர்களது தலையைச் சுத்தி வீட்டுக்கப்புறம் கொண்டு போய் புதைக்கவும். இப்படிக்கு 3-நாள் செய்யவும். எப்பேர்க்கொத்த பிசாசுகளாயிருந்தபோதிலும் தாவித் தடங்கிவிடும்.

### ரட்டினம்—அதற்குக் கவி

ரட்டின மாகிய கோனுனை இனித மாறுமிட்டு
மயவுது கச்சற மவ்விட்டு மேன்மை வாசலிட்டு
கட்டது கவ்விட்டு கற்கூறம் போட்டு மணிபூரம்
பொட்டிட்டிருந்த முஹையதீன் றரைக்குள்ளே பூட்டியதே

### இதற்குச் சக்கரம்




### இதன் பாயிதா

வெள்ளைத் துணி விரித்து மல்லிகைப்பூ நிரப்பி மேற்படி சக்கரத்தை வெள்ளித் தகட்டி லெழுதி வைத்து ஊதுவத்தி கொளுத்தி வைத்து, 303-தரம் படிக்க, ஒன்பது ரத்தினங்களும் வந்திருக்கும். அதை யெடுத்து பார்க்கலாம், யாதொன்றுஞ் செய்யக் கூடாது.

### அரையிட்டு—அதற்குக் கவி

அரைக்குள் ளரைத்து அரனடி போட்டு இகாரமிட்டு
உரைக்கும் நரம்புகள் நாமங்கள் சூட்டிய பத்தட்சரம்
துரைக்க விட்டுறு துளசிப்பூ வாசஞ் சூழவிட்டு
முரைக்குஞ் சுவாசமு மாயிர முஹையதினென்ற நாமஞ்சொல்லே


### இதற்குச் சக்கரம்



### பெண்மயக்கந்தீர—அதற்குக் கவி

சொல்லுஞ் செயலுங் குருமெய்ச் சீடனுஞ் சொல்படியே
வெல்லுமுஹம்மது வேல்விழியால் இருக்கட் டருவெத்துருகும்
வில்லி மிசைகளும் விரிபூசை வேல்களுங் கொடுத்தவனே
கொல்லு முஹையதீனென் றட்சரக் கூர்வையின் சக்கரத்தால்

### இதற்குச் சக்கரம்



### இதன் பாயிதா

மேற்படி சக்காரத்தை தாம்பிரத் தகட்டிலெழுதி சந்தனம் கரைத்து தரையில் தெளித்து, அதன் பேரில் தகட்டை வைத்து ஊதுவத்தி கொளுத்தி மேற்படி பாட்டை 2128-தரம் படிக்க சித்தியாகிவிடும். பின்னர் தகட்டை யெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். பெண்களுக்கு பிரமை யென்ற சிறுக்கு யிருந்தாலும் சரி கினைவு மாறுட்டம் இப்பேர்க்கொத்த இனங் களாக யிருந்தாலும் சரி, அவர்களை அப்புரத்தில் மேற்படி சக்காரத்தை பலகையி லெழுதுஞ் சாயங் கொண்டு வெள்ளை பீங்கானில் எழுதி, முன்னே வைத்து மேற்படி பாட்டை 21




தரம் படித்து தண்ணீர் விட்டுக் கரைத்து குடிக்க கொடுக்கவும். இத்தப்படி 11-நாள் கொடுத்தால் ரஹ்மான் கிருபையால் இதுகளெல்லாம் நீங்கிச் சுகமாகி விடும்.

### சகலத்துக்கும்—அதற்குக் கவி

சக்கர வட்ட மதனில் ஆசன முக்கோணமதில்
உக்கரமட்சரம் பனிரெண்டுக் குள்ளே யெழுதிவைத்து
பக்கம் நிறைத்தும் பரிமளம் பூசிச் செந்தாமரைப்பூ
வக்க நிறைக்கு முஹையதீனென் றட்சரமாயிரத் தெட்டெழுத்தே


### இதற்குச் சக்கரம்



### கடல் பொங்குகிறதை அடக்க—அதற்குக் கவி

ஆயிரத் தெட்டு யிதழும் விரித்து அலங்கரித்து
பாயிர மிட்டு இதம் பர லாறுபொங்கிய பார்வதிக்கும்
காயிர மிட்டு இச்சையில காமக் கருவெழுத்து
காயிர முன்னுக்குள் முஹையதீ னென்றட்சர வாசியிலே


### இதற்குச் சக்கரம்




### உயிரெழுப்ப—அதற்குக் கவி

வாசி யெழுப்பி யிரண்டா யிரங்குரு நாமஞ்சொல்லி
பூசித் திருந்து வகாரத்தை விட்டு சிவனுக்கும்
நாசிக் கும்காவுக்கும் நடுச்செவி தான் கண் ணடிக்குள்ளே
ஆசித் திருக்கு முஹையதீ னென்றட்சரக் கூர்களையே.

### இதற்குச் சக்கரம்




### இதன் பாயிதா

மேற்படி சக்கரத்தை தாம்பிரத் தகட்டி லெழுதி வெள்ளைத் துணி விரித்து அதன் மேல் வைத்து, வெள்ளைத் துணி மேற் கட்டு கட்டி நீங்கள் குளித்து முழுகித் துப்புரவாக வக்திருக்து ஊதுவத்தி கொளுத்தி, 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி' யென்று 1100-தரம் ஓதி பின்னால் மேற்படி பாட்டை 780-தரம் படித்து, 'இம்-இம்' மென்று 2000-தரம் சொல்லவும். இது படித்து முடிக்த பின்னர் தகட்டை யெடுத்து கையில் வைத்துக் கொண்டு பழைய கருவுகளில் போய் நின்று, பாட்டை ஒரு தரம் படிக்க தன் சுரூபத்துடனே யெழுந்து வருவார்கள். மூனேமுக்கால் நாழிகை நின்று பேசலாம். பின்பு போய் விடுவார்கள்.

### கணையாழி—அதற்குக் கவி

கணையாழி வட்டங் கருவான சூட்சங் கருவெழுத்து
இணையான மந்திரம் வேறொன் றில்லாத விரிமந்திரம்
அணைவான பிச்சி மணம்பூத்த வாசிமலர்க் கொடிக்கு
குணமான வள்ளல் முகுபான முஹையதீன் குணபதியே.

### இதற்குச் சக்கரம்






### பரிமளாதி—அதற்குக் கவி

குணபதி யானக்தக் கோமள மாகிய கொவ்வைக்கனி
மணபதி வாச மகிழ்க்த வடகேகும் மிருப்பிடங்கள்
தணபதி வட்ட பயிரா லிதழெட்டு திருச்சவ்விட்டு
கணபதி மூத்து முஹையதீன் திருமணி மாணிக்கமே.


### இதற்குச் சக்கரம்



### ரத்தினம் வரவழைக்க—அதற்குக் கவி

மாணிக்க முத்து மரகதப் பச்சை பொட்டிட்டவனே
பாணிக்கை கொண்டு பதஞ்சிரம் போற்றி பணிக்துகையால்
பேணிக்கை கொண்டுபேருமன் பத்தோ ரட்சரபெண்மயிலே
காணிக்க வேணு முஹையதி னென்ற திருக்காட்சியிலே

### இதற்குச் சக்கரம்




### இதன் பாயிதா

மேற்படி சக்காரத்தை கடுதாசியிலெழுதி முன்னே வைத்து குளித்து முழுகி ஊதுவத்தி கொளுத்தி வைத்து துப்புரவாக யிருக்து 7002-தரம் படிக்க வைரம், செகப்பு, பச்சை, நீலம், மாணிக்கம், நாகரத்தினம், சிவரத்தினம், கோமேதகம், புஷ்பராகம் இப்பேர்க்கொத்த கற்களெல்லாம், மாம்பழம், எலுமிச்சம் பழம் அளவு பிரமாணம் முன்னே வக்திருக்கும். அதை யெடுத்துப் பார்க்கலாம். வீட்டில் வைக்கலாம். விற்க வேண்டுமென்று நாடினால் கூடாமல் போய்விடும். யாருக்கும் காண்பிக்கலாம்.

### எதிரி அச்சம்—அதற்குக் கவி

காட்சிக் கமலக் கருவான பேரும்தான் கண்டறிய
வாச்ச மனது வாடாமல் சுகித்துங்கள் வாசகத்தை
பேசப் பிலன்வர பேரைக் குருவெழுத் தஞ்சுதா
வாச்சு முஹையத் தீன்றிரு முத்திருகை வான் கொருளே.


### இதற்குச் சக்கரம்




### ஐந்துவகை புஷ்பம் வரவழைக்க—அதற்குக் கவி

வான்பொரு ளென்று வடிவஞ்சு வண்ண நிறத்தனிலே
கோனென்று முகல்குரு பதின் மூண்டு கூர்மையினல்
காளென்ற சொல்லில் கடுவென்ற அட்சரம் வந்துதா
தானென்ற முஹையதீன் மெய்ப்பொருள் கடாட்சதக்
[தருங்குணமே

### இதற்குச் சக்கரம்



### இதன் பாயிதா

மேற்படி சக்கரத்தை வெள்ளித் தகட்டி லெழுதி தரையைச் சந்தனம் கொண்டு மெழுகி அதன்மேல் வெள்ளை துணி விரித்து பன்னீர் தெளித்து, பனகம் ஊதுவத்தி வைத்து, நீங்கள் துப்புரவாக குளித்து, முழுகி நல்ல உடுப்புகள் உடுத்தி மேற்படி பாட்டை 5600 தரம் படிக்க முடிவில் 5—வகை புட்பம்




பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள், கோங்கு இப்பேர்க்கொத்த வர்ணங்களுள்ளதாயும் பூலோகத்திலில்லாததாயு மிருக்கும். ஒவ்வொரு பூவுடைய பெருக்கமோ தேங்காய் போல இருக்கும். அதினுடைய வாசனையோ அபுரூபமா யிருக்கும். அதை பெட்டியில் வைத்தால் வீடு முழுவதும் ஒரே வாசனையாக யிருக்கும். பின்னல் நீங்கள் எங்கே யிருந்தாவது ஒரு பூவை நாடி ஒரு தரம் பாட்டைப் படித்து கையேந்தினல் கையில் வந்திருக்கும். யாவருக்குங் கொடுக்கலாம்.

### பகலிரவு—அதற்குக் கவி

தருகுணம் பத்து இருதய கமலத்தி லிசனடி
வருமிரவும் பகலும் மற்றவிடத்தி விட வெகு நதிக்கும்
பருகுமமுது அன்பத்தோரட்சர மஞ்செழுத் தான கனி
குருகின்றுடு முஹையதீனென் றட்சராக் குலக்கொழுந்தே


### இதற்குச் சக்கரம்




### வினைதீர மன்றுட்டம்—அதற்குக் கவி

குலக்கொழுந் தண்ணல் குருகிறம் வண்ணமெனக் குத்தந்து
குலமதி சொல்லி யெனக்கு பதேசித்த சற்குருவே
தலகில காணிலு பஞ்சுடு கிலக் தாணிலுங் கபுர்தாணிலும்
வல்வினை தீர்த்தருள் முஹையதீன் அப்துல் காதிர்நாயகமே

### இதற்குச் சக்கரம்



### இதன் பாயிதா

யாருக்காவது, கைப்பிடித்த இனங்களால் தெரிந்து கொள்ளாத வியாதியாயிருந்தால், பலகையெழுதும் சாயங் கொண்டு வெள்ளைப் பீங்கானில் மேற்படி சக்கரத்தை யெழுதி சாம்பிராணி புகைத்து பாட்டை 21-தரம் படித்து பீங்கானில் ஊதி தண்ணீரை ஊற்றி கரைத்து மேற்படி பாட்டை 6-தரம் படித்து ஊதி மேற்படி தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக் கொடுக்கவும். இந்தப்படி 21-நாளுக்குக் கொடுக்க ரஹ்மான் கிருபையால் எப்பேர்கொத்த வினைகளாயிருந்தாலும் தீர்ந்து சுகமாக இருப்பார்கள்.

### உயிர் எழுப்ப—அதற்குக் கவி

கொழுந்தென்ற பச்சை குலமறி யாதவர் கோலமதை
அழித்துஞ் சுவாச மறுபத்து நாலையும் மஞ்சைரைக்குள்
விழுந்து விரைபத்தி யெழுபத்து மூன்று நாடியும் விண்புகுந்து
அழிந்துயர் மாண்டிட அருள்கொடுத்தார் முஹையதீனஞ்சுழியே

### இதற்குச் சக்கரம்



### இதன் பாயிதா

ஒரு யஹூதியினுடைய பெண்ஜாதிக்கு வெகு காலமாகப் பிள்ளை யில்லாமலிருந்தமையால் முஹையித்தீன் நாயகம், ஹதீது சொல்லிக் கொண்டிருக்கும் நேரத்தில் அந்தப் பெண் பிள்ளை ரொம்பவும் வணக்க வொழுக்கமாக வந்து நின்று, 'நாயகமே




எனக்குப் பிள்ளை இல்லை' யென்று சொன்னாள். நாயகமவர்கள் அந்தப் பெண் பிள்ளையைப் பார்த்து ஓ பெண் பிள்ளையே, நீ ஒரு ஆண் பிள்ளையை பெறுவா யென்று சொன்னார்கள். மேற்படி பெண் பிள்ளை வீட்டிற்குப் போய் இறந்துவிட்டாள். மேற்படி நாயகம் சொன்ன சங்கதி பெண்ணுடைய புருஷனுக்கு தெரியும். அவன் பெண் பிள்ளையை யெடுத்து அடக்கம் செய்து வீட்டில் வந்து ரொம்பவும் விசாரமாகவிருந்தான். அப்படியிருக்கும் நேரத்தில் இவன் இனத்தார் சிலர் வந்து, அவனுக்கு ஆறுதலான புத்தி சொன்னார்கள். அப்போதவன் சொன்னது: நேற்றைய தினம் முஹையித்தீன் ஆண்டவர்கள் என் பெண்ஜாதிக்கு, 'நீ ஆண் பிள்ளை பெறுவாய்' என்று உத்திரவு சொன்னார்களாம். அப்படியிருக்க இன்றைக்கு இறந்துபோய் விட்டாளென்று சொன்னான். அதிலிருந்து சில பேர்கள் சொன்னதாவது:— உத்திரவு எங்கே? பிள்ளை பெற்றாள் இறந்து போய் விட்டாளே யென்று கேவலமாகப் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில், நாயகமவர்களது சீஷராகிய பக்கீரர் ஒருவர் அந்தப் பாதையாக வந்தார்கள். இந்த விஷயங்களை யெல்லாம் அவர் நின்று சிறிது நேரங் கேட்டு, நாயகரவர்களிடத்தில் சொன்னார்கள். நாயகம் இச்சேதியைக் கேள்விப்பட்டு, ரொம்பவும் கோபமுடனே எழுந்து, யஹூதியுடைய வீட்டில் வந்து அவனைக் கூட்டிக் கொண்டு போய், 'உன் பெண்ஜாதியை எந்த இடத்தில் அடக்கஞ் செய்திருக்கிறீர். காண்பி' யென்று கேட்டார்கள். அவன் இதுதானென்று காண்பித்தான். நாயகம் அவர்கள், 'ஓ பெண் பிள்ளையே எழுந்திருந்து வா' வென்று சொன்னார்கள். மேற்படி பெண் முன்னிருந்த ரூபத்தைவிட அதிக சௌந்தரியாக எழுந்து வந்து, இவர்கள் எதிரில் நின்றாள். இவர்கள் சொன்னதாவது: 'ஓ பெண் பிள்ளையே முன் உனக்கு ஒரு ஆண் பிள்ளை பிறக்குமென்று சொன்னேனல்லவா? இப்போது வீட்டுக்குப் போ; உனக்கு 7-பிள்ளைகள் பிறக்கும்; அதன் பிறகு மவுத்தாவாய்' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்கள். இதே பிரகாரம் அவள் 7-பிள்ளைகளைப் பெற்று, மவுத்தாய் விட்டாள். இப்படிக்கு அருள் கொடுத்தவர் குதுபு நாயகங்களாவர். எல்லாக் காரியங்களும் குத்துபு முஹையித்தீன் என்னப்பட்டவர்களால் நடக்கும்.

## புலி வாயை கட்டுகிறதும் யானையைப் பிடிக்கிறதும்—அதற்குக் கவி

அருஞ்சுழியெட்டுந் திசையெட்டும் நிறை அருகரகம்
வருகட்டு யானை புலிகடுவாய் சிங்கம் யாளியையும்
மிருகத்தின் முன் மூனைப் பாச்சல் முகமுந் தலை திருப்பி
தருகக் கருவையு முஹையதினென் னட்சரந் தைத்ததுவே.

### இதற்குச் சக்கரம்



### இதன் பாயிதா

மேற்படி சக்கரத்தை வெள்ளித் தகட்டிலெழுதி நீங்கள் குளித்தும் வெள்ளைத் துணி உடுத்தி, தலையிலும் வெள்ளைத் துணி கட்டி துப்புரவான விரிப்புகள் விரித்து, அதில் சந்தனங் கரைத்து தெளித்து ஊதுபத்தி அல்லது சாம்பிராணி புகைத்து தகட்டை முன்னே வைத்து, மேற்படி பாட்டை 1128-தரம் படித்து முடித்தபின் தகட்டை யெடுத்து சுருட்டி வெள்ளித் தாயைத்துக்குள் அடைத்து பத்திரப்படுத்தி வைக்கவும்; பின்னால் நீங்கள், சிங்க மிருக்குங்காடு, புலி யிருங்குங் காடு, காடிகள் யிருக்குங் காடு, குழிமாடுகளிருக்குங் காடு, மற்றும் மிருக சாதிகளிருக்கும் காடுகளுக்குப் போய் யானை பிடிக்க வேண்டுமென்றால் நீங்கள் எத்தனை பேர்கள் ஒன்றாகப் போகிறீர்களோ ஒவ்வோர் பேர்களுக்கும் ஒவ்வோர் சக்கரம் தாயத்துக்குள் அடக்கஞ் செய்து வைத்துக்கொள்ள வேண்டியது. நீங்கள் யானை பிடிக்கப்போகும் நேரத்தில் அர்த்தராத்திரி காலங்களில் நீங்கள் செய்ய வேண்டிய வகைகளாவது:—மணங்களான சோறுகள் மாமிச மில்லாமலாக்கி, வாழைப்பழம் சர்க்கரை இதுகள் வைத்து முஹையித்தின் ஆண்டவர் பேருக்கு



பாத்திஹா ஓதி சோறும் வாழைப் பழமும் சர்க்கரையும் பங்கிட்டு நீங்கள் யானை பிடிக்குங் கயிறுகளையும் வடங்களையும் எடுத்துக் கொண்டு ஒரு தண்ணீர் தாவளம் பார்த்து, அந்த இடத்தில் நீங்கள் இருந்து, சாம்பிராணி புகைத்து மேற்படி பாட்டை 20-தரம் படிக்க எந்தக் காடுகளிலிருந்தாலும் நீங்கள் இருக்கும் இடங்களுக்கு யானையும், அதுகளுடைய குட்டிகளையும் கூட்டிக் கொண்டு உங்களை சுத்தி சுத்தி அதுகள் வந்து நிற்கும். அப்போது நீங்கள் வெள்ளித் தாயத்தை யெடுத்து யாமுஹியித்தீ னென்று சொல்லி, இடுப்பில் போட்டுக் கொண்டு கயிறுகளையும் வடங்களையும் யெடுத்து யாமுஹ்யித்தீன் என்று சொல்லி, பயப்படாமல் அஞ்சாமல் ஒரே உறுதியாக ஓடிப் போய் விரட்டினால் அதுகள் காலெழுந்து நடக்க வொட்டாமல் தள்ளாடித் தள்ளாடி ஓடும். நீங்கள் கயிற்றை வீசினால் கயிறு தப்பாமல் அதினுடைய காலில் விழுந்து சுருக்கி விடும். அதுகள் உங்களை ஒன்றுஞ் செய்ய முடியாது. அதுகள் விடுவிடென்று ஆடிக்கொண்டு நிற்கும். அப்போது நீங்கள் அதுகளை ஒரு சிறு மரங்களில் கட்டிவிட்டு நிற்க, நாலைந்து நாள் சென்று, முஹ்யித்தீன் ஆண்டவர்களுக்கு பாத்திஹா ஓதி சர்க்கரை பகுர்ந்து, மேற்படி யானையைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தால், சும்மா வந்து விடும். இதற்கு இடையில் உங்களை யானை பிடிக்கிற நேரத்தில் யாராவது தடுத்தால், அந்தத் தடுப்புகளும் மாந்திரீகர்களும் உங்களுக்கு அணுவு பிரமாணமாவது சேர மாட்டாது. யானை பிடிக்கப்போகும் நேரத்தில் அந்த விபரப்படி செய்துக் கொண்டு போகவும்.

## சூனியம் விலக—அதற்குக் கவி

தச்சது வாக்கிய சத்துரு சூனியந் தானறுத்து
நச்சது வாக்கிட நடத்தியே கோவருள் நாகங்கொண்டே
முச்சது வாகி மூன்றெழுத் தட்சர வான்மை யென்னை
வச்சுரு வாக்கு முஹையதினென் னட்சரவாய்மைகொண்டே

## இதற்குச் சக்கரம்





## இதன் பாயிதா

ஒருவருக்கு வஞ்சனை சூனியங்கள் யிருந்தால் புது கலயத்தில் தண்ணீர் வாற்றி கண்ணல் சக்கரத்தை எழுதி 21-தரம் படித்து தண்ணீரைக் குடிக்க கொடுக்கவும். இக்தப்படிக்கு 40-நாள் செய்ய ரஹ்மான் கிருபையால் தீர்ந்து விடும்.

## ஞான முணர்க—அதற்குக் கவி

கொண்டே கருணை தேவருள் பூட்டிய கோவரையின்
பண்டே உதித்த பகர் முறை ஞானக் கருவெழுத்தை
விண்டே யெனக்கு யென்குரு வித்தை யிசைத்துவைத்தார்
கன்றே முஹையதீ னென்ற கடுவனை முத்திரையே.

## இதற்குச் சக்கரம்




## பில்லி வஞ்சனை சூனியம் விலக—அதற்குக் கவி

முத்திரை யானது மூவுல கெங்கு முழங்கிவந்த
பத்திரை யானது முஹம்மது பாதம் பணிகெஞ்சமே
சத்துரு வஞ்சனை சூனியம் தன்னைத் தரித்தறுத்து
பத்திரையா யென்னை வைத்தாளு முஹையதினென்ற பராபரமே.



## இதற்குச் சக்கரம்



மேற்படி சக்கரத்தை தாம்பிரத் தகட்டி லெழுதி சாம்பிராணி புகைத்து துப்புரவாகி யிருந்து 2120-தரம் படிக்க நித்தியாகி விடும். பின் யாருக்காவது பேய் பிசாசுகள் வஞ்சனை பில்லி சூனியம் ஏவல் இப்பேர்க்கொத்த கஷ்டங்களிருந்தால் அவர்களை முன்னே வைத்து, சாம்பிராணி புகைத்து மேற்படி பாட்டைப் படிக்க எப்பேர்க்கொத்த பேய்களெல்லாம் ஆடும். வஞ்சனை பில்லி சூனியங்களெல்லாம் தெறித்து விடும்.

## பூட்டு முறிய—அதற்குக் கவி

பரமென்று வுன்னை பணிவிடை கொண்டு பாதவித்து
வரமென்று வந்துன் றீங்காரப் பூட்டை யிகாரமிட்டு
உறமெட்டி நின்ற ஓங்காரத்துனே உலாவிய குண்டலியை
நறகாட்ட வேணு முஹையதீ சரக்கட்டிலே.


## இதற்குச் சக்கரம்



## நகை கழட்ட—அதற்குக் கவி


சரக்கட்டிதழிட்டு மணிமக் கிரமாலை பதக்கமிட்டு
பாவைத் திருக்த பளிங்குமா மணிமண்ட பச்சரைக்குள்
தாம்வைத் தடைத்து கணையா சனத்தில் ஏகாரமிட்டு
துர்வாசி கொண்ட முஹையதீன் சாஹிபு துளக்கருத்தே.

### இதற்குச் சக்கரம்



கருவென் றுரைத்த பளிங்குகண் ணடியின் காதல்வைத்து
உருக்கண்டு சிந்தை உலாவிய கூட்டத்தி லுள்ளிருந்த
மருவந்து ஊரி மலங்காம லுண்டிருக் துன்மலரை
குருவென்று தெரிசித்தே முஹையதீன் சூத்ராமணி விளக்கே.

### இதற்குச் சக்கரம்



### நெருப்பு கொளுத்த—அதற்குக் கவி

விழிக்கா மொழிவை விரக்தேத்தி யெங்கும் விரித்து வைத்து
துலக்கான சரிகைக் கிரிகையுடன் மோகமுந் தேர்க்துகனி
பழக்கான கெவுன பராபரனை பார்வை மனோன் பணிக்கன்
மூளிப்பாட் டக்காட்டு முஹையதீன் சாகிபு முன்னிலையே

### இதற்குச் சக்கரம்







### வில் முறிய—அதற்குக் கவி

விலையெட்டுத் திக்குத் திசைகாலு ஈரெட்டுக் கோடுக்குமேல்
வலையெட்டி வைத்த மனோமணி காசியின் றுணிநடுவில்
சிலையெட்டி வைத்து வீறிசிகார பன்பத்தோ ரட்சரக்
[கூர்க்கலையில்
கலைவைத்து வீச கலாபிக்கு முஹையதீன் கருணை கடாட்சமே


### இதற்குச் சக்கரம்



### செய்த வினை தீர—அதற்குக் கவி

கடாட்சரங் கருணைக் கல்லாகி பூத்தேவு பசாசுகளை
கொடாகு கொண்டு சத்துரைச் செய்வினையும் கொடுவினையும்
சடமல் வல்வினை சூனியமுந் தேகக் கட்டளைத்தும்
கூடாமல் தூரத்திவைத்தார் முஹையதீன் சோதி திருவுளமே

### இதற்குச் சக்கரம்




### மாத்தான் வணங்க—அதற்குக் கவி

திருவுள முத்திதரு மந்திரமானதை வாசத்துள்ளே
உருமைக் கருவெழுத்தான உபாயத்தை உச்சரித்து
கருமைக்கூ ரட்சரம் காந்தாரி யிட்டுக் கருவெழுத்தை
உருமைக்கு முஹையதீ னென்றட் சரக்கெ வரிசியே.

## இதற்குச் சக்கரம்



## தகுத்தர் ஜெயிலானி—அதற்குக் கவி

### விருத்தம்

கதிரவன் உதிக்கும் வேல்கை கனமலா தனியேயேகி
தனியவன் கிருபையாலே தானவ னருளைப்பெற்று
புவிதனில் வொலிமார்க் கெல்லாம் நாயகக் குருவாய் வந்த
பனிரண்டு வருஷ நோன்பாய் பன்பதா யிருந்த கோவே.

### இதன் பாயிதா

ஆதம் அலைஹிஸ்ஸலாத்தை அல்லாஹூ தஆலா சொர்க்க லோகத்தை விட்டும், அவர்களை யெடுத்து எறியும் போது அவர்களுடைய பாதம் மலையில் பச்சை மாகதக் கல்லில் வைக்கப் பட்டது. அவர்கள் வைத்த பாதம் பச்சை மாகதக்கல் மறைந்து மாமாகி விட்டது. முஹியித்தீன் அப்துல் காதிர் ஜெயிலானி நாயகப் பொருள் குருவானவர்கள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் மலையில் ஜியாரத்து செய்து தகுத்தர் ஜெயிலானி மலைக்கு வந்து அந்த யிடத்தில் பனிரண்டு வருஷ நோன்பாக யிருந்து, தவங்கள் பெற்று, அவுலியா அக்தாபு இவர்களுக்கெல்லாம் ராஜ நாயகமாக அல்லாஹூ தஆலா திருநாம முண்டாக்கி முஹையதீன் அப்துல் காதிர் ஜீயிலானி யென்று பேரும் பெற்று, அந்த மலையில் அல்லாஹூ ஸுபுஹானஹூ தஆலாவுடைய குதறத்தால் அங்கே வழியுண்டாகி அதற்குள் அவர்கள் நடந்து அல்லாஹூ தஆலாவுடைய அர்ஷில் கவமணி யென்ற தொட்டிலில் போய் படுத்து துயில் புரிந்துக் கொண்டிருந்தார்கள். பின்னர் பூலோகத்துக்கு வந்து சில பிரசங்கமான காரணங்களை காண்பிப் பார்கள். ஏனென்றால் பூலோகம் ஷா என்னப்பட்ட மறைப்பு



ளுக்காக பக்தாதில் அடக்கமானார்கள். தகுத்தர் ஜெயிலானி மலை சுராங்கவாயிலா யிருக்கும் காட்சியானது: நீங்கள் யாராவது அங்கே போக வேண்டுமானால் மண்ணாசை பெண்ணாசை பொருளாசை இந்த மூன்று ஆசாபாசங்களும் கொஞ்சமாவது எண்ணமல் நமது தவத்தை பெறுகிறதற்கு வேண்டியது அந்த முஹையதீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் பாதம் காண வேண்டுமென்று ஒரே உறுதியாக அங்கே போய் பார்த்தால், மலை வளர்ந்து, நாகப்படம்போல் வளைந்திருக்கும். அந்த மலையினடுவில் முஹையதீனப்துல் காதர் ஜெயிலானி, நாயகங்களென்றெழுதி யிருக்கும். அதற்கு கீழ் நீங்களிருந்து நாற்பது நாளைக்கு நோன்பாக யிருந்து ஐந்து வக்தும் விடாமற்றொழுது ஒவ்வொரு நேரமும் "லாஇலாஹ இல்லல்லாஹூ முஹம்மதுர் றஸூலுல்லாஹி" யென்று நூறும், ஸலவாத்து நூறும், பாட்டு 25 தாமும் இந்த விபரப்படி நீங்கள் செய்துக் கொண்டு வந்தால் அந்த சுரங்கத்துக்குள்ளிருந்து ஒரு பக்கீர் வருவார். அவர்களைக் கண்டவுடனே நீங்கள் ஸலாம் சொல்லவும், அவர்கள் உங்களைக் கூட்டிக் கொண்டு போவார்கள். அங்கே உள்ளே போனால் கொஞ்சம் தலைக்கு குனிந்துக் கொண்டு போக வேண்டும், இருட்டான வழியா இருக்கும். அங்கே பார்த்தால் ஒரு வெளிச்சக் தோன்றும், வெளிச்சங் கண்டு அப்புறம் போனால் இரண்டு மலைக்கு இடையில் ஒரு ஆள் போகும்படியான வழி தென்படும். அந்த வழியில் நடக்கும் பாதையில் கீழே மரம் போட்டிருக்கும். அதன் மேல் நடக்கும் பாதையில் பாலங் கிடுகிடென் றசையும். ரொம்பவும் இருட்டான வழிகளாக யிருக்கும். அப்படி கொஞ்சம் நேரம் நடந்து போனால், ஒரு வெளி அகலமாகத் தோன்றும், அந்த வெளியில் ரொம்பவும் அகோரமான காற்று வீசியடிக்கும். அதற்கப்புறம் போனால் கிணறு ஒன்றிருக்கும். அந்தக் கிணற்றை உற்று பார்த்தால் ஒரே இருளாக யிருக்கும். கிணற்றுக்குள் இருந்து சுழல் காற்று அகோரமாக வீசும். பூலோகத்தில் ஆசை வைத்த பேர்களா யிருந்தால் அவர்களுக்கு அந்த கிணறு மட்டுந்தான் எத்தப்படும். அவர்கள் அந்தக் கிணற்றைக் கண்டவுடனே, அதினுடைய இருட்டையும் ஆழத்தையும் காற்று சுழலையுங் கண்டு பயந்து திரும்பி வந்து விடுவார்கள். பூலோகத்து ஆபாசங்களை வெறுத்து இருக்கும் பேர்களானல்

"பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்" என்று சொல்லி அந்த கிணற்றிலிறங்கினால், கால் தரையிலே தானிருக்கும், கீழே நுழைந்துப் பார்த்தால் ஒரு சுரங்க வழி தோன்றப்படும். அந்த வழிக்கப்புறம் கல்லினாலும் வெள்ளியினாலும் போட்ட கதவுமா யிருக்கும். அதற்கப்புறம் போனால் ஒரு மணமுள்ள காற்று ஒன்று வரும். அதற்கப்புறம் ஒரு நாற்காலி பச்சை மரகதம் கல்லினால் ஆறுமுழ நீளமும் மூன்றரை முழம் அகலமும் நாலு காலு வைரமும் அதில் பஞ்சணை மெத்தை விரித்திருக்கும். அதில் அப்துல் காதிர் ஜெயிலானி படுத்து துயில் புரிந்த வண்ணமிருப்பார்கள். அதற்கப்புறம் போனால் ரொம்பவும் கூர்மையுள்ள வாள் இரண்டு வீசி கொண்டே யிருக்கும். அதற்கப்புறம் போனால் புலி ஒன்று படுத்திருக்கும். அதற்கப்புறம் ஒரு வெளி தோன்றும், அந்த வெளியில் ஒரு பள்ளிவாசலொன்று யிருக்கும். அந்த பள்ளிவாசல் ரொம்பவும் அழகும் வடிவும் உள்ளதாக விருக்கும். அந்தப் பள்ளிவாசற்கு சுற்றி பூங்காவன தோட்டங்கள் இருக்கும், அதில் மாதுளங்கனிகளதிகமாக யிருக்கும். நீங்கள் பள்ளிவாசல் முன்னில் இருக்கும் ஹவுளில் ஒலுவுசெய்து சுன்னத்து இரண்டு றக்அத்து தொழுது பின் உங்களுக்கு பசியாற மாதுளங் கனிகளைப் பறித்து தின்னவும். இன்னும் அந்தப் பள்ளியிலிருந்து ஐந்து நேரமும் வந்து விடாமற் றொழுது வரவும். வெள்ளிக்கிழமை இராத்திரி காலங்களில் அந்தப் பள்ளிவாசலுக்கு அவுலியா, அன்பியா, ஒலிமார்கள் இவர்கள் வந்து, அந்தப் பள்ளிவாசலில் தொழுவார்கள். உங்களுக்கு இருக்க இடமில்லாமலிருக்கும். அப்படிக்கு கணக்கிலடங்காத பேர்களாக வெள்ளிக்கிழமையில் அந்தப் பள்ளிவாசலுக்கு தொழுக வருவார்கள். இன்னும் அந்த தோட்டத்திலிருந்து 3-வழி தோற்றப்படும். ஒரு வழி சுவர்க்கலோகத்துக்குப் போகிற வழி, ஒரு வழி மக்கத்துக்குப் போகிற வழி, இன்னுமொரு வழி நரகத்துக்குப் போகிற வழியா யிருக்கும். நீங்கள் கொஞ்ச நாளைக்கு அங்கே யிருந்தால், நம்ம குரு நாயகம் அவர்கள் உங்களுக்குக் காட்சி கொடுப்பார்கள். உங்களுக்கும் போகும்படி உத்தரவாகி விடும். நீங்கள் அப்போது மக்கத்துக்குப் போக நாடி நடந்தால் கொஞ்ச நேரத்திற்குள்ளாக மக்கத்துக்குப் போய் சேர்வீர்கள். இன்னும் நீங்கள்



இருக்கும்படியான ஊர்களுக்கு நாடி நடந்தால், கொஞ்ச நேரத்திற்குள்ளாக வந்து விடுவீர்கள். இந்த குதறத்துகளெல்லாம் மறைந்து விடும்.

இதில் சில பாட்டுகளுக்கு விபரம் போடாமலிருக்கிற பாட்டுகளை நீங்கள் துப்புரவாக யிருந்து ஊதுவத்தி கொளுத்தி 1138-தரம் படிக்க சித்தியாகி விடும். ஒவ்வொரு வேலைவற்றிற்கும் முஹ்யித்தீன் ஆண்டவர்களால் அருள் செய்வார்கள். உங்களுக்குக் காட்சிகள் கொடுப்பார்கள். அநேகப் பதவிகளையும் அவர்களால் பெற்றுக் கொள்வீர்கள். முஹியித்தின் ஆண்டவர்களால் தாம் எல்லாப் பதவியும் அடைய வேண்டியது எதை நினைத்து தெண்டனிட்டு வருவீர்களோ அது முஹியித்தின் ஆண்டவர் குருவைக் காணலாம். எல்லா காட்சிகளும் அவர்களால் நடக்க வேண்டியதே. அநேக காவியங்களிற் சொல்லி வருகிறது: அவர்களுடைய அரூப சுரூபங்களைக் காண முடியாது. இந்த வழிகளால் அவர்களுடைய காட்சியை பெற்றுக் கொள்ளலாம். எல்லாத்துக்கும் அவர்கள் தானமற்ற அவுலியாக்களுக் கெல்லாம் அவருடைய பாதம் பட்டால் மாத்திரந் தான் அவுலியாப் பட்டங் கிடைக்கும். அப்பேர்ப்பட்ட நாயகங்களாவார்கள்.

முஹ்யித்தீன் ஆண்டகை சத்துரு சங்காரம்

முற்றுப் பெற்றது.

பிஸ்மில்லா ஹிர் றஹ்மா னிர் றஹீம்.

இஃது

# ஞான சொர்க்க பதி

அல்லாஹு ஸுபுஹானஹுவ தஆலா நமது நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை, பூலோகத்திற்கு அனுப்பி, அவர்களுக்கு வழிப்பட்டு கலிமாச் சொல்லி ஈமான் கொண்டபேர்களுக்கு சொர்க்கபதி கொடுப்பேனென்றும், அவர்களுக்கு வழிப்படாமல் கலிமாச் சொல்லி ஈமான் கொள்ளாத பேர்களுக்கு நரக வேதனைகளை கொடுப்பேனென்றும் திருவுளமா யிருக்கிறான். அந்த கலிமாவாகிறது 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலு அல்லாஹி' என்னும் கலிமாவாக விருக்கும். இந்த கலிமா தான் நம்மவர் எல்லோர்களையும் சுவர்க்கபதிக்கு வழிகாட்டி வைக்கும்.

## விருத்தம்

காண்பது அழிந்து போகும் காயமு மழிந்து போகும்
உண்பது மழிந்து போகும் உலகமு மழிந்து போகும்
வீண்பகல் போக்கா நெஞ்சே மேலவ னருளைப் பெற்றால்
நாண்மணி யுடைய சொர்க்கம் நன்குடையருளு வானே.

நீங்கள் கண்ணால் காணும் வஸ்துக்கள் அழிந்து விடும். உங்களுடைய காயமு மழிந்துவிடும். நீங்கள் பதினெட்டு நாள் பாகத்துடனே அருந்திய உணவுகளும் அழிந்து விடும். எப்பவும் அழியாத வஸ்தாகிறது அந்த அல்லாஹு ஸுபுஹானஹுத் தஆலா ஒருவனாக யிருக்கும். அந்த அழியாத வஸ்துவை நீங்கள் தேடி அருள்களைத் தெண்டித்து பெற்றுக் கொள்ளாத பேர்கள் நரகம் என்ற நெருப்பு வீட்டைக் காண்பார்கள். அவனுடைய அருளென்னப்பட்ட அமலாகிறது, முதலாவது தொழுகையா யிருக்கும்; யாராவதொருவன் தொழுகையை விட்டிருந்தானாகில் அவன் இஸ்லாத்தை விட்டும் விலகினவனாக இருப்பான்.



இன்னும் நமது நபிகள் நாயகத்திற்கு மாறு செய்தவனாக யிருப்பான். இன்னும் அவன் பாவியாகி இபுலீசு மக்களாய்ப் போய் விடுவான். அவனை மாறு சாதி யென்றும் சொல்லப் படும். யாதாவதொருவர் தொழுகை யில்லாமலிருந்தால் அநேக ஜக்காத்து சதக்காக்கள் கொடுத்திட்டாலும், அவன் கொடுக்கும் கொடைகள் ஒன்றும் கபூலாக மாட்டாது. அவனும் முனபிக்கு தனத்தை யுடையவனாய்ப் போய் விடுவான். அல்லாஹு தஆலா நமக்கு விதித்த ஐந்து நேரத் தொழுகையை விடாமல் தொழுதும் றமலான் மாதத்தில் முப்பது நோன்பு பிடித்தும், உங்கள் கைகளிலிருக்கும் பணங்களுக்கு தகுந்தபடிக்கு ஜக்காத்து சதகாக்கள் கொடுத்தும், ஏழை யெளியோர்களுக்கு உணவு கொடுத்துப் பசியாற்றியும், எல்லா உயிர்கள் பேரிலும் தன்னுடைய உயிர்போல் ஈகை, இரக்கம் வைத்தும் கோபத்தை ஹறுமாக்கியும், விலக்கல் என்னப்பட்ட ஹராமான கெட்ட செயல்களை விட்டு நீக்கியும், உங்களிடம் இருக்கும் பணங் காசுகளுக்கு சக்திக்கு தக்கபடி பள்ளிவாசல்களைக் கட்டியும், அல்லது பள்ளிவாசல்களுக்கு ஒத்தாசை செய்தும், இந்த முறையில் நீங்கள் நல்அமலைச் செய்து பெற்றுக் கொண்டால் உங்களுக்கு அந்த ரஹ்மான் மேலான பதவியாகிய ஏழாவது சொர்க்கலோகத்திலே மகா நவநீதம் பொருந்திய வடிவுகளான எழுபது வீடு கொடுப்பான்.

அந்தந்த வீடுகளில் நூறு ஹூறுல்ஈன் பெண்களையும் கொடுப்பான். அந்தந்த வீடுகளில் போயிருந்து அந்தந்தப் பெண்களை நீங்களனுபவித்து, ஊழியூழி காலம் வரைக்கும் அந்த இடத்திலேயே தரிபாடாக யிருப்பீர்கள். ஆண்களாவது பெண்களாவது செய்கிற அமலாகிறது, இராத்திரி காலத்தில் தனித்திருந்து ஓத வேண்டியது: "அஸ்தக்கு பிறுல்லாஹில் அலீம்" என்று நூறும் பின்பு, 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி' யென்று நூறும், பின்னர் ஸலவாத்து 200-ம், பின் 'லாஇலாஹ இல்லல்லாஹு' யென்ற திக்று நூறும் இந்த விவரங்களாகப் முப்பத்தொன்பது நாளைக்குச் செய்யவும். நாற்பதாவது நாளையில் இந்த விவரப்படி நீங்கள் செய்து விட்டு, இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு, வாயை மூடி கீழுதடு ஒரு விரல் தாழ்த்து, நாவெடுத்துச் சொல்லாமல்

'ஹிம் ஹிம்' என்று கொஞ்ச நேரம் இந்த எழுத்தை கல்பால் உறுத்த உறுத்த இரண்டு புருவத்திற்கு மிடையில் இருக்கும் ஞானக்கண் திறந்து உங்கள் முன்னில் வெள்ளை நிறமான ஒரு ஒளிவு காணப்படும்.

அந்த ஒளியில் ஒரு கண்ணாடி காணப்படும். அந்தக் கண்ணாடி எவ்விதமாக யிருக்குமென்றால், வட்டமாக யிருக்கும். அதை சுத்தி முதல் வளையம் சிவப்புகள் அழுத்தியதாக யிருக்கும். இரண்டாவது வளையம் நாகரத்தினங்கள் அழுத்தியதாக யிருக்கும்; மூன்றாவது வளையம் ஜீவரத்னங்கள் அழுத்தியதாக யிருக்கும்; நாலாவது வளையம் பச்சைக்கல் அழுத்தியதாக யிருக்கும்; ஐந்தாவது வளையம் வைரமழுத்தியதாக யிருக்கும்; ஆறாவது வளையம் ஆணிமுத்து அழுத்தியதாக விருக்கும்; ஏழாவது வளையம் பவளமழுத்தியதாக விருக்கும். இப்பேர்ப்பட்ட இனங்களால் அழுத்தப்பட்ட வேலைகளாக விருக்கும். கண்ணாடி உங்கள் முன்னிலையில் அந்தரங்கமாக வந்து நிற்கும். நீங்கள் அந்த நேரத்தில் கண்ணால் நோக்கிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தவுடனே, உங்களுக்குத் தெரியும் காட்சிகளாவது ஆகாசம், பூமி, மலை, கடல், நதி, பாதாளம், அர்ஷு குர்ஸு சொர்க்கம் நரகம், பதினெண்ணாயிரம் ஆலமும் அதற்கு அடங்கிய படைப்புகள் அநேகங்களும் உங்களுடைய முன்னிலையில்·சமீபமாகத் தெரியும்.

அப்படி அவைகள் கொஞ்ச நேரக் தெரியும். பிறகு அவைகளெல்லாம் மறைந்து விடும். அதற்குப் பிறகு உங்களுக்கு ஒரு பாதை காணப்படும். அந்தப் பாதையை நோக்கிப் பார்க்கவும். அந்தப் பாதையில் தெரிகின்ற காட்சிகளாவது:— தோட்டம் ஒன்று காணப்படும். அந்தத் தோட்டமும் இவ்வளவ்வளவு வருஷத்து தொலைதூர நீளமென்றும், அகலமென்றும் சொல்லக்கூடாதபடி பெரிய தோட்டங்களாக யிருக்கும். அந்தத் தோட்டமும் முத்தால் அழுத்திய திருமதிலாக யிருக்கும். அந்தத் தோட்டம் மஞ்சள் நிற மின்னலைப்போல அழகா யிருக்கும். அந்தத் தோட்டத்தில் நிற்கும் மரங்களோ மாதுளை மரங்களும் மாமரங்களும், வாழை மரங்களும், கொய்யா மரங்களும், பலா மரங்களும், முந்திர மரங்களும், தென்னை



மரங்களும், நாரத்தை மரங்களும் இன்னும் இந்த மரங்கள் கூட அநேக வித மரங்கள் நிற்கும். அந்த மரங்களை இன்ன மரங்களென்றும் இன்ன வடிவுகளென்றும், இன்ன அழகுகளென்றும், இன்ன நிறங்களென்றும் சொல்ல முடியாத மரங்களாக யிருக்கும்.

அந்தந்த மரங்களிலே கிடைக்கும் கனிவர்க்கங்களோ அதினுடைய பருப்பங்களோ, அதனுடைய வடிவங்களோ அதினுடைய இன்பங்களோ, அதினுடைய ருசிகளோ அதினுடைய மதுரங்களோ எவரெவர்களாலும் சொல்ல முடியாத கனிகளாக விருக்கும். இன்னும் அந்தத் தோட்டத்தில் இருக்கும் மணல்களோ பசுவின் பாலைக் காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமுள்ள வெள்ளை நிறமான மணல்களா யிருக்கும். அந்த மணல்களில் கிடைக்கும் கற்களோ பச்சை கல்லாக விருக்கும். இன்னும் அந்தத் தோட்டத்தில் நிற்கும் வர்ணவர்ணங்களான பூச்செடிகளோ 1, 10, 100, 1000, 10000, லட்சம், கோடி, சங்கம், மகாசங்கம், அற்புதம் நிற்புதமென்று சொல்லாநின்ற கணக்கிலடங்காத பூச்செடிகளாக விருக்கும். இன்னும் அந்தத் தோட்டத்திலிருக்கும் வீடுகளோ முத்தினாலேயும், பவளத்தினாலேயும், மாணிக்கத்தினாலேயும், பச்சையினாலேயும், சிவப்பினாலேயும், நாகரத்தினத்தினாலேயும், ஜீவரத்தினத்தினாலேயும், கோமேதகத்தினாலேயும், வைடூரியத்தினாலேயும், இந்திரக் கல்களினாலேயும் பணதிகளாகச் செய்யப்பட்ட வீடுகளாக விருக்கும்.

அந்தந்த வீடுகள் தோறும் பச்சை, பவளம், சிகப்பு, வைரம், இவைகளினால் தூண்களை நிறுத்தி, தூணுக்குத் தூணு குறுக்கே மாணிக்கம், வைரம், இந்த கற்களை வளைவாகப் போட்டு, ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்தால் செய்த சங்கிலியால் கொழுவி, அதற்குக்கீழ் ஒன்பது வகை ரத்தினங்களால் எழுதப்பட்ட கொட்டியிலே கொழுவிக் கொழுவி அந்தந்த வீடுகள் தோறும் இருக்கும். இன்னும் அந்த வீடுகளைச் சுற்றியும் தோட்டங்களைச் சுற்றியும், வர்ணங்களான பூச்செடிகளைச் சுற்றியும் கனிவர்க்கங்களான மரங்களை சுற்றியும், பாலாறு, தேனாறு, மதுவாறு இப்பேர்ப்பட்ட மதுரம் பொருந்திய ஆறுகளாக மூன்று ஆறுகள் ஓடிக் கொண்டே யிருக்கும்.

இன்னும் அந்தந்த வீடுகள் தோறும் இருக்கும் பெண்களினுடைய அழகுகளோ, அவர்களினுடைய நிறங்களோ, அவர்களினுடைய வாசங்களோ, எவர்களாலும் சொல்ல முடியாதபடி அரிதான பெண்களா யிருப்பார். இன்னும் அவர்களுடைய கூட்டத்தில் காது, நெற்றி, கழுத்து, மூக்கு, உதடு, வாய், நெஞ்சு, ஸ்தனம், கை, வயிறு, தொப்புள், இடை, அங்குல், பாதம் இவைகளுடைய அழகையும், நிறத்தையும், ஒளிவையும், பரிமளங் கமழா நின்ற வாசங்களையும் மட்டிட்டு சொல்ல அரிதான மகா நூதன வடிவு சௌந்தரா, அழகு பொருந்திய பெண்களாக விருப்பர்.

இன்னும் அதிலிருக்கும் மலர்களுடைய வாசமோ புனுகு, சவ்வாது, அத்தர், பன்னீர், சந்தனம் இந்த ஐந்தில் இருக்கப்பட்ட வாசனத்தை காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமுள்ள வாசனையுடையதா யிருக்கும். இன்னும், அந்த தோட்டங்களைச் சுற்றி வீசி வரும் காற்றுகளோ பரிமளமென்று சொல்லா நின்ற வாசங்களைக் காட்டிலும் பதினாயிரம் பங்கு அதிகமுள்ள வாசங்களுடைய காற்றுகளா யிருக்கும்.

இந்தப் பெண்கள் அந்த மதுரமுள்ள தண்ணீர்களில் முழுகி, இந்திரவர்ண பட்டுகளை உடுத்தி, மகா அழகு பொருந்திய நகை ஆபரணங்களையும் பூண்டு, மகா மதுரம் பொருந்திய முப்பத்திரண்டு களபாகத்துடனே கறிகளும் உண்டு, நின்று மரங்களிலே கிடக்கும் கனி வர்க்கங்களையும் பசியாறி பாலாறு, தேனாறு, மதுவாற்றுத் தண்ணீர்களையும் குடித்து சில பெண்கள் அந்த அன்ன ஊஞ்சல் தொட்டிலில் இருந்து சுபசோபனமாக ஆடிக் கொண்டே யிருப்பார்கள். அவர்களுக்கு அந்தத் தோட்டத்தைச் சுற்றி வீசி வரும் காற்றுகளோ பரிமள வாசத்தைப் போலும் 100-பங்கு வாசமுள்ள காற்றுகளா யிருக்கும். இன்னும் எந்தெந்த நேரமும் அந்த பெண்கள் அந்த ரகத் தொட்டிலில் இருந்து ஆடிக் கொண்டே யிருப்பார்கள்.

இன்னும், அந்த தோட்டத்துக்கு நடுவில் குப்பாவொன்றிருக்கிறது. அது ரொம்ப உயரமும் ரொம்ப பருப்பமுள்ளதா யிருக்கும். அந்த குப்பா என்ன பண்புகளால் செய்திருக்குமென்றால் வைரம், முத்து, பவளம், மாணிக்கம், நாகரத்தினம், சீவரத்தினம், பச்சை, சிகப்பு, வைடூரியம், புஷ்பராகம்,



கோமேதம் இப்பேர்கொத்த கல்லுகளால் பணிதிகள் செய்யப்பட்ட வேலைகளா யிருக்கும். அந்த குப்பாவுக்கு உயரம் வைத்திருக்கிற சிகரங்களாகிறது ஒன்பது வகை இரத்தினாதி கல்களினால் அழுத்தப்பட்ட சிகரங்களாய் இருக்கும்.

இன்னும் அந்த குப்பாவுக்கு நாலு வாசல்கள் உண்டாயிருக்கின்றன. ஒரு வாசல் முத்தால் அழுத்திய நிலையும் தங்கத்தினால் போட்ட கதவுமா யிருக்கும். இரண்டாவது வாசல் பவளத்தாலெழுதிய நிலையும், பொன்னினால் போட்ட கதவுமா யிருக்கும். மூன்றாவது வாசல் வைரத்தினால் அழுத்திய நிலையும், வெள்ளியினால் போட்ட கதவுமா யிருக்கும் நாலாவது வாசல் மாணிக்கத்தினால் அழுத்திய நிலையும், ஒன்பது வகை ரத்தினாதிகளால் அழுத்தப்பட்ட கதவுமா யிருக்கும். இன்னும், அந்த குப்பாவுக்கு நடுவில் நவமணிகளால் அழுத்தப்பட்ட சப்ரமஞ்சத்து அன்ன ஊஞ்சல் இரண்டு தொங்கும். அவைகளில் ஒன்றில் 'நூர் முஹம்மது' எனப்படும் ஒளியும், மற்றொன்றில் குத்தூஸ் எனப்பட்ட முஹியித்தீனென்ற வொளியும், இந்த சப்ரமஞ்ச அன்ன ஊஞ்சல் தொட்டிலில் துயில் புரிந்துக் கொண்டே யிருக்கும்.

அந்த கோத்தில் ஒவ்வொரு தொட்டில்களின் தலைப்பக்கம் இரு பெண்களும், கால் பக்கம் இரு பெண்களுமாக நின்று ஆடிக் கொண்டே யிருப்பார்கள். இன்னும் சில பெண்கள் வெண்சாமரம் வைத்து வீசிக்கொண்டே நிற்பார்கள். இன்னும் சில பெண்கள் வீணை முதலிய வாத்தியங்களை வைத்து ராகங்களாகப் பாடிக் கொண்டே நிற்பார்கள். இவைகளெல்லாம் உங்கள் மணக்கண் திறந்து வெளியாகி இந்தக் காட்சிகளை யெல்லாம் காணப்படும் நீங்கள் இந்த இரண்டு வொளிகளையும் கண்டவுடனே, உங்களுடைய கல்பு காபுல் காபா என்னுங் கடலைப் போல் விரிவாகி விடும். நீங்களும் மூமின் தனம் பெற்ற பேர்களாகி விடுவீர்கள். உங்களுக்கும் அவ்லியாத்தன முண்டாகி, விலாயத்துகளும் வெளியாகி விடும்.

நீங்களும் நீதமீன் காண முடியாத காட்சிகளெல்லாம் காணுவீர்கள். நம்முடைய குருவாகிற அமுத முஹியித்தீன் ஆண்டவர்களாக யிருப்பார். இந்தக் குருவை காணாத பேர்கள் செய்யும் தவங்கள் ஒன்றும் நிறைவேற மாட்டாது. இந்தக் குருவினாலேதான் நம்மவர்கள் ஞானம் வெளியாகி அருள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பூலோகத்தில் முரீது வைத்துக் கொடுக்கப்பட்ட குருமார்களை யிட்டு நமக்கு யாதாமொரு வழியையும், பலனையும் கொடுக்குமென்றும் வழிகள் வெளியாகு

மென்றும், அருள்களை பெற்றுக் கொள்ளலா மென்றும், மாந்தர்கள் நாடி நாடி நாளையும் போக்கி, தேடித் தேடி வயசுகளையும் போக்கி, காட்சிகள் ஒன்றுங் காணாமல் வீணாகி மாண்டு போவார்களல்லாமல் கொஞ்சமாவது பலன்களை அடையப் போகிறதில்லை.

பூலோகத்தில் முரீது வைத்துக் கொடுக்கப்பட்ட குருமார்கள் எப்பேர்க்கொத்த பேர்களாக இருக்க வேண்டுமென்றால் அவர்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை இந்த ஆசைகளையும் துறந்த பேர்களாகவும். அல்லாஹு தஆலாவின் அருள்களைத் தெண்டித்துப் பெற்றுக் கொண்ட பேர்களாகவு மிருக்க வேண்டும்; நரகமென்ற நெருப்பு அவர்களை தீண்ட ஹறாமா யிருக்கும். அவர்கள் திரேகங்களில், நெருப்பு முதலானதுகள் பட்டால், குளிர்ந்த பச்சை தண்ணீராகி விடும். இப்படியாகக் கொடுத்த அருள்களைப் பெற்ற பேராயிருந்து உங்களுக்கு முரீது கொடுத்தாலும் குத்தூஸ் என்ற முஹையதீனென்ற ஒளிவு வெளியானால் தான் உங்களுக்கு காட்சிகள் கொடுக்கப்படும். அந்த குருவினாலேயே நம்மவர்க்கு ஞானம் வெளியாகி, காட்சிகளைப் பெற்றுக் கொண்டு சொர்க்கலோகப் பதவியடைய வேண்டும்.

இன்னுஞ் சிலபேர் பூலோகத்தில் வயிறு பிழைக்க சில மாந்தர்களாக, தவம்பிரசாலி தபோதனர்கள், தவங்களைப் பெற்றுக் கொண்டவர்களைப் போல, பூலோகத்தை மருட்டி மயக்கி வைக்கும்படியான சில வேஷங்களை போட்டுக் கொண்டு வந்து, உங்களை மருட்டி ரொம்பவும் ஜாலங்களைச் செய்து, முரீதுகள் தாரேன் என்று சொல்லி மருட்டுவார்கள். அவர்களை நீங்கள் ஒரு அணுவளவும் நம்ப வேண்டாம். இன்னமும் அவர்கள் உங்கள் காதுகளுக்கு இன்பமாக சில ஏட்டுப் பிரதிகளிருக்கிற பாட்டுகளை நாகரீகத்தோடு படித்துச் சொல்லுவார்கள் அவைகளைக் கேட்டு நீங்கள் மருண்டிட வேண்டாம். தவம் என்ற "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்ற கலிமாக்குள்ளே எல்லா படிப்புகளும் அடங்கியிருக்கின்றன.

அதற்குமேல் யாதொன்றும் கிடையாது. பறக்கும் நல்ல பாம்பு கடைவாய்க்குள் நாகரத்தினதி ஜீவரத்தினதி யென்று சொல்லப்படும் இரண்டு கற்கள் அதின் கடை வாய்க்குள்ளிருக்கின்றன. அந்த பாம்பானது உங்கள் கிட்டே வந்து "ஓ மனிதர்களே, என்னுடைய கடை வாயிற்குள் நாகரத்தினதி



ஜீவரத்தினதி எனப்படும் இரண்டு கற்கள் இருக்கின்றன. அந்தக் கற்களை நான் கக்கி, உங்களிடத்தில் தருகிறேன்; அதை நீங்கள் வாங்கிக்கொண்டு கடைகளிலுள்ள வியாபாரிகளிடத்தில் விற்று சிலவு செய்யுங்களென்று சொல்லுமா? அல்லது அந்தப் பாம்பை யாவது நம்மால் எப்போதாவது கண்டுப் பிடிக்க முடியுமா? அல்லது காடு செடிகள் மலை வனாந்திரங்களில் தேடினாலும் அந்தப் பாம்பை காண முடியுமா? அதைப்போல் தான், அல்லாஹு தஆலாவின் அருள்களைத் தெண்டித்துபெற்ற பேர்களை நம்மால் காணமுடியாது.

இன்னும் கலிமாவுக்கு அதிகமாக யாதொன்றுங் கிடையாது. கலிமாவையும், ஸலவாத்தையும், நாளுக்கு நாள் அதிகமாகச் சொல்லி வருவீர்களானால், நமது றசூல் நாயகம் அவர்களைக் காணலாம். "நூர்" எனப்படும் ஒளியும், குத்தூஸ் எனப்படும் ஒளியும், இரண்டு ஒளியு மொன்று தான். நீங்கள் பூலோகத்தில் இந்த இரண்டு ஒளிவையும் கண்டு, அவைகளால் காட்சிகளைப் பெற்றுக்கொண்ட பேர்களுக்கு நடக்கும் நன்மைகளாவது:—அவர்கள் மவுத்தாகி தாருல் பனா என்கிற பித்தனா உலகத்தை விட்டும் தாருல் பகா வென்கிற தலம் போய்ச் சேர்ந்தால், நீங்கள் கண்ட தோட்டங்களில் போயிருந்து மகா மதுரமுள்ள சோறுகளும் மகா ருசிகளா யிருக்கும் கறி வகைகளான பதார்த்தங்களும் உண்டு, தின்று பசியாறி மரங்களிலே கிடக்கும் அநேக கனிவர்க்கங்களையும் அருந்தி, பாலாறு, தேனாறு, மதுவாறு—இந்தத் தண்ணீர்களையும் குடித்து, மகா சந்தோஷமாக அந்தந்த வீடுகள் தோறும் இருக்கும் அன்ன ஊஞ்சல்களில் போயிருந்து சுப சோபனமாக ஆடிக்கொண்டே யிருப்பீர்கள்.

பின்னர், இதற்கு மேல் அதிகமாக சொர்க்கலோகமும் கிடைக்கும். அந்த சொர்க்கலோகத்தைச் சுற்றிலும் இந்த தோட்டங்களைப் போல் 4-தோட்டங்கள் இருக்கின்றன. அவைகளிலே இப்பேர்க்கொத்த நிஃமத்துகளாக யிருக்கும்: சொர்க்கலோகத்திற்கு ஏழு திருமதி லுண்டாயிருக்கிறது. முதலாவது திருமதில் வைரக்கல் அழுத்தியதாக யிருக்கும். இரண்டாவது திருமதில் முத்தினால் அழுத்தியதாக யிருக்கும். மூன்றாவது திருமதில் சிவப்பினா லழுத்தியதாக யிருக்கும். நாலாவது திருமதில் பவளம்

அழுத்தியதா யிருக்கும். ஐந்தாவது திருமதில் பச்சைக்கல் அழுத்தியதா யிருக்கும். ஆறாவது திருமதில் மாணிக்கத்தினால் அழுத்தியதா யிருக்கும். ஏழாவது திருமதில் காகரத்தினாதிகளால் அழுத்தியதா யிருக்கும்.

இந்த ஏழு திருமதில்களும் ரொம்ப பருப்பமும், ரொம்ப அழகும், ரொம்ப நெடுந்தூரமு முள்ளது. மதிருதிலா யிருக்கும் அங்கே தரைகளாகிறது தங்கத்தினால் செங்கல்லும் பொன்னினால் செங்கல்லும், வெள்ளியினால் செங்கல்லும் பதித்த தரைகளாயிருக்கும். அந்தத் தரையின் மேல் இருக்கும் மணல்களோ பசுவின் பாலைக் காட்டிலும் பதினாயிரம் பங்கதிகமான வெள்ளை நிறமுள்ளதா யிருக்கும். அந்த மணல் மேலே கிடைக்கும் கற்களோ ஒன்பது வகை ரத்தினாதி கற்களாயிருக்கும். அந்த மணல்களுடைய வாசனையோ புனுகு, சவ்வாது, அத்தர், பன்னீர், சந்தனம் இந்த ஐந்து தினுசுகளை தருமோ, அந்த வாசனைகளைக் காட்டிலும் பதினாயிரம் பங்கு அதிகமான வாசனையுடையதா யிருக்கும்.

இன்னும், அந்தந்த தரைமேல் நடந்தால் பூப்பஞ்சணை மெத்தையின் மேல் நடந்தால் காலுக்கு என்ன மெதுவா யிருக்குமோ அதுபோல் ஆயிரம் பங்கு மெதுவும் குளிர்ச்சியும் ரூஹத்துமா யிருக்கும். இன்னும் அத்தரையின் மேல் இருக்கும் வீடுகளோ ஒரே முத்திலேயும், ஒரே வைரத்தினாலேயும், ஒரே பச்சையினாலேயும், ஒரே சிகப்பினாலேயும், ஒரே மாணிக்கத்தினாலேயும், ஒரே புஷ்பராகத்தினாலேயும், ஒரே பவளத்தினாலேயும், ஒரே காகரத்தினத்தினாலேயும், ஒரே ஜீவரத்தினத்தினாலேயும், ஒரே நீலத்தினாலேயும், ஒரே கோமேதகத்தினாலேயும், ஒரே யாகூத்து கல்லினாலேயும், ஒரே வைடூரியத்தினாலேயும், இப்பேர்ப்பட்ட ஒவ்வொரு வித கல்களினாலேயும், ஒவ்வொரு வித முத்துகளினாலேயும் செய்யப்பட்ட அறுபத்து நாலு அடுக்குள்ள மெத்தை வீடுகளாயிருக்கும்.

ஒவ்வொரு மெத்தையின் தூண்கள் முத்து, வைரம், பச்சை, சிவப்பு, மாணிக்கம் இப்பேர்ப்பட்டவைகளாக அழுத்திய தூண்களாக இருக்கும். ஒவ்வொரு மெத்தையும் ஒவ்வொரு விதமான அழகுடைய வேலைகளாக யிருக்கும். இன்னும் ஒவ்வொரு மெத்



தையும் முத்து, பவளம், மாணிக்கம், வைரம், சிகப்பு, பச்சை வைடூரியம், கோமேதகம், மரகதம் இப்பேர்ப்பட்ட கற்களா யிருக்கும், ஒவ்வொரு ஜன்னல் வாசற்களில் முத்து, வைரம், பவளம், பச்சை, சிகப்பு, மாணிக்கம், தங்கம், பொன், வெள்ளி இவைகளாக ஆயிரத்து அறுபத்து நாலுவிதமான இனங்களா யிருக்கும்.

இன்னும் ஒவ்வொரு மெத்தையில் ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்தினால் செய்த சங்கிலிகளில், ஒன்பது வகை ரத்தினாதி கற்களினால் அழுத்தப்பட்ட அன்ன ஊஞ்சல்கள் ஆயிரத் திருபத்தி நாலு விதங்களா யிருக்கும். இவ்விதமான நவநீதம் பொருந்திய அறுபத்தி நாலு மெத்தை வீடுகளு மிருக்கும். ஒவ்வொரு வீடுடைய பருப்பங்களோ அஷ்டகிரி மலையைப் போல பெருக்கமும் நெடுங்கிரியைப் போல உயரமுள்ளதா யிருக்கும். இன்னமும் முத்தினாலே அழுத்திய தரைகளும் பவளத்தினாலே அழுத்திய தரைகளும் மாணிக்கத்தினாலே அழுத்திய தரைகளும் பச்சைகளினாலே அழுத்திய தரைகளும் இப்பேர்ப்பட்ட கற்களினால் அழுத்தப்பட்ட தரைகளில் பாலாறு, தேனாறு, மதுவாறு, உண்ண மகா மதுரமுள்ள இனிப்புகளான ஆறுகளாக முப்பத்திரண்டு விதமான ஆறுகளோடிக் கொண்டே யிருக்கும்.

இன்னும் அநேக விதங்களான தோட்டங்கள் இருக்கின்றன. அந்தத் தோட்டங்கள் இவ்வளவு நீளமென்றும் இவ்வளவு அகலமென்றுஞ் சொல்ல முடியாத தோட்டங்களா யிருக்கும். அந்தத் தோட்டங்களில் நிற்கும் மரங்களோ தங்கம், வெள்ளி, பொன், பச்சை, மாணிக்கம், சிகப்பு, வைரம் இவைகளாக இருக்கும். அந்த மரங்களிலே யிருக்கும் கனிவர்க்கங்களோ முத்துபோல் சில கனிகள், பவளம் போல் சில கனிகள், மாணிக்கம்போல் சில கனிகள் இவ்விதமான கனிகளா யிருக்கும். அந்தந்த மரங்களிலிருக்கிற பூக்களில் நின்றும் ஒழுகும் தேன் துளிகளானது அந்தந்த ஆறுகளில் ஓடும் தண்ணீர் மேலே வழிந்துக் கொண்டே யிருக்கும். அந்தந்த மரங்களில் இருக்கும் பறவைகளோ முத்துப்போல் சில பறவை, பவளம் போல் சில பறவை, மாணிக்கம் போல் சில பறவை, தங்கம்போல்

சில பறவை, பொன்னைப்போல் சில பறவை, வெள்ளியைப் போல் சில பறவை ஆக இவ்விதமான பலபல வர்ணங்களுடைய பறவைகளாகக் கோடிக் கோடிகளாக இருக்கும்.

இன்னும் அந்தப் பறவைகள், "மூமின் முஸ்லிம்களே! நீங்கள் பூலோகத்தில் நலத்தைச் செய்து நல்வழி யென்ற தவத்தைப் பெற்றுக் கொண்டு வந்த பேர்களே. நீங்கள் எங்களைப் பாருங்கள்" என்று ரொம்பவும் வணக்கத்துடன் கூறி ஸலாஞ் சொல்லும். இன்னும் ஒவ்வொரு வீடு முன்னில் ஒவ்வொரு தெப்பக்குளம் யிருக்கும். அந்த குளத்துக்கு கரையாகிறது, தங்கம் வெள்ளிகளால் பதித்த தரைகளா யிருக்கும். இன்னும், அந்த குளத்துக்கு நாலுபடித் துறை களுண்டா யிருக்கும். ஒரு படித்துறை முத்து, இரண்டாவது படித்துறை பவளம், மூன்றாவது படித்துறை வைரம், நாலாவது படித்துறை மாணிக்கம் இவைகளினால் அழுத்திய படித்துறை களா யிருக்கும்.

இன்னும், அந்தக் குளத்திற்கு நடுவில் முத்தினாலே ரொம்பவும் உயரமுள்ள ஒரு தூண் யிருக்கும். அந்தத் தூணி லெழுதி யிருக்கிறதாவது:— "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம் மதுர் றஸூலில்லாஹி" என்னும் கலிமாவாகும். அந்தத் தூணுதான் தீன் எண்ணப்பட்ட தூணா யிருக்கும். இன்னு மந்த குளத்துக்கு முன்னிலையில் முத்து, வைரம், பவளம், மாணிக்கம், சிகப்பு, பச்சை, நாகரத்தினதி கல், கோமேதகம், தங்கம், பொன், வெள்ளி இப்பேர்ப்பட்ட பலவித வகைகளா லழுத்தப்பட்ட பணிதிகளாகச் செய்யப்பட்ட மேடைகள் அறுபத்து நாலுவிதமான மேடைகள் யிருக்கும். ஒவ்வொரு மேடையும் பவளம், வைரம், மாணிக்கம், சிவப்பு இவைகளாலே தூண்களும், குறுக்கே பச்சைக்கல், கோமேதகக்கல், யாகூத்து கல், புஷ்பராகக்கல், இந்தக் கற்களை வளையாகப் போட்டு ஆயிரத் தெட்டு மாற்றுத் தங்கத்தினால் செய்த சங்கிலியும் கொழுவி, கீழ் ஒன்பது வகை ரத்தினதி கற்களினால் அழுத்தப்பட்ட தொட்டில் களா யிருக்கும்.

இன்னும், ஒவ்வொரு மேடைக்கு முன்னிலையில் முத்து, வைரம், பவளம், மாணிக்கம், நாகரத்தினம், ஜீவரத்தினம்



இவைகளால் செய்யப்பட்ட வேலைப்பாடு இருக்கும். ஒவ்வொரு மேடைக்கு முன்னிலையில் நானுவித குப்பாக்களிருக்கும். முத்து, பவளம், மாணிக்கம், வைரம், பச்சை, சிவப்பு இவை களால் செய்யப்பட்ட பணிதிகளாக இருபத்திரண்டு அடக் குள்ள குப்பாக்களா யிருக்கும். ஒவ்வொரு கற்களாலே அழுத் தப்பட்ட வேலைகளா யிருக்கும். ஒவ்வொரு குப்பாவுடைய மெத்தைகளில் அறுபத்து நாலு விதமான ஊஞ்சல் தொட்டில் களா இருக்கும். இன்னும், சப்ரமஞ்சக் கட்டில்கள் நாற் காலிகள் புட்டுவங்கள் அறுபத்து நாலுவித பணிகளான வேலை களா யிருக்கும்.

இன்னும், அந்த குப்பாக்களைச் சுற்றியும் அந்த மேடை களைச் சுற்றியும், அந்த தெப்பக் குளங்களைச் சுற்றியும் கோடி களான பல பல வர்ணங்களான கனி வர்க்கங்களுடைய மரங் களும், பல நிறங்களுடைய வர்ணங்களான பூச்செடிகள் இருக் கும். ஒவ்வொரு செடிகளின் பூவில் கமழா நின்றவாசனை யானது பரிமள வாசனையைக் காட்டிலும் ஆயிரம் பங்கு அதிக முள்ள வாசனைகளுடையதா யிருக்கும். இன்னும், அந்தக் குளத்திலிருக்கும் தண்ணீர் பசுவின் பாலிலும் ஆயிரம் பங்கு அதிகமுள்ள வெள்ளையும் தேனிலும் ஆயிரம் பங்கு அதிகமான மதுரமுள்ள தித்திப்பான தண்ணீரா யிருக்கும். இன்னும் அந்தந்த வீடுகள் முன்னால் முத்தாலும், பவளத்தாலும், வைரத் தாலும், மாணிக்கத்தாலும் இப்பேர்ப்பட்ட கற்களால் அழுத் தப்பட்ட ஆயிரத்தறுபத்து நாலுவிதங்களான இருப்பிடங்களா யிருக்கும்.

இன்னும், அந்த வீடுகளைச் சுற்றியும் இன்னும் இந்தத் தோட்டங்களைச் சுற்றியும், குப்பாக்களைச் சுற்றியும் மகா நவநீதம் பொருந்திய வேலைகளால் செய்யப்பட்ட இருப்பிடங் களால் ஆயிரத்தறுபத்து நாலு விதமான இருப்பிடங்கள் இருக்கும். வீடுகள் தோறும், தோட்டங்கள் தோறும் இந்த விதங்களான இடங்கள் தோறும் இந்தக் கனிவர்க்கங்களான மரங்கள் தோறும், பாலாறு, தேனாறு, மதுவாறென்னும் முப்பத் திரண்டு விதங்களான ஆறுகள் தோறும், அந்தந்த இடங்கள் தோறும், தங்கி இருந்து இன்பங்களையும் வாசனைகளையும் சுகங்

களையும் மதுரங்களையும் ருசிகளையும் அனுபவிக்கும்படியான பெண்கள் உண்டு. ஹூருல்ஈன் பெண்களா யிருப்பர். அந்த ஹூருல்ஈன் பெண்களின் வடிவையும் ஒளிவையும் அழகையும் நிறத்தையும் குணத்தையும் இன்பத்தையும் மதுரத்தையும் சுகத்தையும் எவர்களாலும் மட்டிட்டுச் சொல்ல முடியாத அபூர்வப் பெண்களா யிருப்பர்.

இன்னும், அந்தப் பெண்களின் அழகுகளோ ஒளிவுகளோ நிறங்களோ வடிவுகளோ: சிவப்பு நிறம், மின்னலில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக ரூபிகளான வடிவு சௌந்தரியம் அழகு பொருந்திய பெண்களா யிருப்பர். மஞ்சள் நிற மின்னலில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக ரூபிகளான வடிவு சௌந்தரியம் அழகு பொருந்திய பெண்களா யிருப்பர். பச்சை நிற மின்னலில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக ரூபிகளான வடிவு சௌந்தரிய அழகு பொருந்திய பெண்களா யிருப்பர். காங்குநிற மின்னலில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக ரூபிகளான வடிவு சௌந்தரிய அழகு பொருந்திய பெண்களா யிருப்பர். வெள்ளை நிற மின்னலில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக ரூபிகளான வடிவு சௌந்தரிய அழகு பொருந்திய பெண்களா யிருப்பர். கறுப்பு நிற மின்னலில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக ரூபிகளான வடிவு சௌந்தரிய அழகு பொருந்திய பெண்களா யிருப்பர். நீலநிற மின்னலில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக ரூபிகளான வடிவு சௌந்தரிய அழகு பொருந்திய பெண்களா யிருப்பர். ஊதா நிற மின்னலில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக ரூபிகளான வடிவு சௌந்தரிய அழகு பொருந்திய பெண்களா யிருப்பர்.

இந்த ஒவ்வொரு ஒளிவில் நின்றும் ஆயிரம் பங்கு அதிக முன்னதாக ஒவ்வொரு ஹூருல்ஈன் பெண்ணும் படைக்கப் பட்டிருப்பாள். ஒவ்வொரு பெண்ணின் வடிவில் ஆயிரம் பங்கில் ஒரு பங்குகளானது பூலோகத்தில் பிரகாசிக்கு மின்னலென்று சொல்லப்படும். இன்னும் அந்தப் பெண்களின் திரேகங்களி னுடைய வாசனையானது சாந்து சவ்வாது சம்பங்கி எண்ணெய் தேய்த்து, மல்லிகை முல்லை இருவாட்சி மருக்கொழுந்து ஆகிய மலர்களைச் சூடி, சந்திர பிரபை சூரிய பிரபை அணிந்து,



அவர்கள் அழகாபரணங்களை முடிக்கும் கூந்தல்களினுடைய ஒரு வாசனை நெத்தி, காது, புருவம், கண்கள், மூக்கு, உதடு, பல் இவைகளினுடைய ஒரு வாசனையும், பாகையும், பாலையும், தேனையும், தேவாமிர்தத்தையும் பதித்து, மகா நாகரீகத்தோடும் அவர்கள் பேசும் நாவுகளினுடைய ஒரு வாசனையும், கழுத்து, கை, நெஞ்சு, ஸ்தனம், வயிறு, அக்குள், தொடை, பாதம் இவைகளினுடைய ஒரு வாசனையும் அவர்களின் ஒவ்வொரு தலங்களுக்கும் ஒவ்வொரு வாசனைகளுடையதா யிருக்கும்.

அந்தந்த தலங்களி லிருக்கும் வாசனையோ எப்போர்ப்பட்ட வாசனையா யிருக்கு மென்றால்:—

## தொங்கல்

பூவுஞ்சரிகுழல் சம்பங்கி வாசம்
    புகில் அகில்புகை அத்தர் வாசம்
பேசும்வாய் குமிழ் விழிகுவளை
    பெருத்த நாத்தத்தின் வாசமாகும்
சங்கைபழித்ததோர் மணிதுண்டங்கள்
    சவ்வாதினுடைய வாசமாகும்
கொங்கை அதிரெண்டும் களபவாசம்
    குழித்த அகிலவின் பரந்த வாசம்
மங்கையர் தன்னை பழித்தகாமம்
    பச்சை பரிமள வாசமாகும்
பங்கையர் தன் வயிறு மேனி
    மவுலா கஸ்தூரி வாசமாகும்
பரிவுடன் பாதமோ மல்லிகையும்
    பூவில் பொருந்திய வாசமாகும்

இன்னும், அந்த பெண்ணின் வடிவுகள், பகற் காலத்தில் ஆயிரம் கலைகளோடு பிரகாசிக்கும் சூரியனானவன் அந்தப் பெண்ணைக் கண்டால், நாம் இந்தப் பெண்களுக்கு ஆயிரம் பங்கில் ஒரு பங்காவது அழகில்லையே, வடிவில்லையே என்று சொல்லி ரொம்பவும் வெட்கப்பட்டு ஒளிந்து, ஒளிவு பிரகாசிக் காமல் மறைந்து விடுவான். இன்னும் இராத்திரி காலங்களில் 16-கலைகளோடும் பிரகாசிக்கும் பூரணச் சந்திரனானவன், அந்தப்

பெண்ணைக் கண்டால், நாம் அந்தப் பெண்களுக்கு ஆயிரம் பங்கில் ஒரு பங்காவது அழகில்லையே வடிவில்லையே, என்று சொல்லி ரொம்பவும் விசாரப்பட்டு அழுது சலித்தவனாகி, ஒளிவு பிரகாசிக்காமல் நின்று விடுவான்.

இன்னும், அந்தப் பெண்களை வானத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் கண்டால், நாம் இந்த பெண்களின் திரேகங்களிலிருக்கும் மயிர்களின் அழகில்லையே என்று ரொம்பவும் வெட்கப்பட்டு வானத்தை விட்டும் பூமியில் குதித்து விடும். இன்னும், அந்தப் பெண்கள் வாயைத் திறந்து அமிர்தத்தை கடல் தண்ணீரில் துப்பினால் சப்த சமுத்திரங்களாகிய ஏழு சமுத்திரங்களும் மதுரம் பொருந்திய பால் கடலாகி போய் விடும். இன்னும், அவர்கள் வாய் அமுர்தத்தைக் கொஞ்சம் கரைகளில் துப்பினால், கரைகளிலிருக்கும் மண், மரம், புற் பூண்டு, மிருக ஜாதி சகல ஜீவாத்மாக்கள் எல்லாம் கஸ்தூரி வாசனைகளுடையதாகி விடும். இன்னும் இந்தப் பெண்கள் தலை, காது, கழுத்து, கால் இவைகளில் அணிந்திருக்கும் ஆபரணங்களி லொன்று பகற் காலத்தில் பூமியில் தவறி விழுந்தால், சூரியனுடைய சுடர் ஒளி மங்கிப் போய் விடும். இராத்திரி காலங்களில் அந்த ஆபரணங்களில் ஒன்று பூமியில் தவறி விழுந்தால் சந்திரனுடைய ஒளி மங்கிப் போய் விடும்.

இன்னும், இந்தப் பெண்களுடைய வடிவையும், அழகையும், நிறத்தையும், குணத்தையும், இன்பத்தையும், மதுரத்தையும், ஒளிவையும், பரிமளங்கள் கமழும் வாசனைகளையும் எவர்களாலுஞ் சொல்ல முடியாத அபூர்வ பெண்களாயிருப்பர். இந்தப் பெண்கள் அந்தந்த வீடுகள் முன்னிலையில் இருக்கும் தெப்பக் குளத்தில் முழுகி, வில்லூரிபட்டுகளையும் உடுத்து சீவி வகுந்து சாந்து சவ்வாது சம்பங்கி எண்ணைகளைத் தேய்த்து மல்லிகை, முல்லை, இருவாட்சி, மருக்கொழுந்து இந்த மலர்களைச் சூடிச் சந்திர பிரபை அணிந்து அவர்களது அழகாபரண கூந்தல்களையும் முடித்து மையுண்ட சுர்மாக்களை அவர்கள் கண்களிலிட்டு, சொர்க்கலோகத்திலே இருக்கும் முத்து மாலை, மோகலி மாலை, பச்சை மாலை, வைர மாலை, சிகப்பு மாலை, மாணிக்க மாலை, நாகரத்தின மாலை, ஜீவரத்தின மாலை இந்த மாலைகளை அவர்கள் கழுத்தி



லணிந்து ஆயிரத்தெட்டு மாற்று தங்கப் பணிதிகளால் செய்யப் பட்ட தண்டை கொலுசு பாடகங்களை கால்களிலணிந்து, சொர்க்க லோகத்துப் பரிமள வாசனையை அவர்கள் திரேகங்களில் பூசி, மகா மதுரம் பொருந்திய 72-வகையான சோறுகளும் மகாமதுர முள்ள ருசிகளாக இருக்கும் 72-வகையான கறிகளும் தங்கத் தட்டுகளில் சோறுகளும், பொன் தட்டுகளில் கறிகளும், முத்து, வைரம், பவளம், மாணிக்கம், பச்சை இவைகளால் செய்த கிளாசு களில் பாலாறு, தேனாறு, மதுவாறென்ற மகா மதுரமுள்ள தண்ணீர்களாக முப்பத்திரண்டு விதமான தண்ணீர்களும் இவர் களுக்கு முன்னில் வந்திருக்கும். இவைகளை இவர்கள் பசியாறி, மரங்களிலே கிடைக்கும் அநேகவித கனிவர்க்கங்களையும் புசித்து இந்த தண்ணீரையும் குடித்து, இந்தப் பெண்கள் மேடைமேல் ரொம்பவும் சந்தோஷத்துடனே எழும்பி சில பெண் களிருக்கும் அன்ன ஊஞ்சல் தொட்டில்களில் போயிருந்து ஆடிக்கொண்டே யிருப்பார்கள்.

இன்னும், சில பெண்கள் அந்த மேடைகளின் மேலிருந்து, பந்தடித்து விளையாடிக் கொண்டே இருப்பார்கள். இன்னுஞ் சில பெண்கள் மேடைகளிலிருந்து நாகரீகமான வீணை வாத்தி யங்களை வைத்து ராகங்கள் பாடிக் கொண்டே இருப்பார்கள். இன்னும் சில பெண்கள் வீடுகளிலிருக்கும் கட்டில்களில் போய் படுத்து நித்திரை செய்வார்கள். இன்னும் சில பெண்கள் சோபாக்களில் போயிருந்து நாகரீகமான வார்த்தைகளைப் பேசிக் கொண்டே யிருப்பார்கள். இன்னும் சில பெண்கள் ஜோடி ஜோடிகளாகச் சேர்ந்து தோட்டங்களைச் சுற்றி விளையாடு வார்கள். இப்படியாக அந்தப் பெண்கள் சொர்க்கலோகத்திலே எப்பவும் மவுத்தில்லாமல் நெடும் ஊழியூழி காலம் வரைக்கும் அவ்விடத்திலேயே தரிபாடாக விருந்து வாசம் செய்வார்கள். ஒவ்வொரு வீடுகளிலிருக்கும் பெண்களோ, நூறு இருநூறு மூன்னூறு ஆயிரம் வரையில் இருப்பர். இதுதான் முதலாவது சுவர்க்கமா யிருக்கும்.

இரண்டாவது சுவர்க்கம்:— இதைப்போல் ஆயிரம் பங்கு அதிகமுள்ள அழகும், நிஃமத்துகளும் ஹூருல்ஈன் பெண் களும் அதிகமா யிருப்பர். மூன்றாவது சுவர்க்கம்:— இதைப் போல ஆயிரம் பங்கு அதிகமுள்ள வாசமாகவும், நிஃமத்து

களாகவும் ஹூருல்ஈன் பெண்களும் அதிகமா யிருப்பர். நாலாவது சுவர்க்கம்:— இதைப்போல் ஆயிரம் பங்கு அதிக நிஃமத்துகளும் அழகும், மரங்களுடைய கனி வர்க்கங்களும், வீட்டினுடைய அழகுகளும், ஹூருல்ஈன் பெண்களும் அதிகமா யிருப்பர். ஐந்தாவது சுவர்க்கம்:— இதைப்போல் ஆயிரம் பங்கு மகா மதுரம் பொருந்திய வாசனைகளும் வடிவுகளும், ஹூருல்ஈன் பெண்கள் அதிகமா யிருப்பார்கள். ஆறாவது சொர்க்கம்:— இதைப்போல ஆயிரம் பங்கு ரொம்பவும் ரூஹத்தாகவும் குளிர்ச்சியாகவும், ரொம்ப சுத்தமாகவும், அங்கு ஹூருல்ஈன் பெண்களும் அதிகமா யிருப்பர். ஏழாவது சொர்க்கம்:— இந்த 6-சொர்க்கத்தைப் போல் ஆயிரம் பங்கு அதிக வடிவும், அதிக நிறமும், அதிக கனி வர்க்கங்களும் அதிகமான நிஃமத்துகளும் அதிகமான சுகமும் அதிகமான குளிர்ச்சியும், அதிகமான ரூஹத்துகளும், அதிகமான ஹூருல்ஈன் பெண்களும் அதிகமா யிருப்பர்.

8-வது சொர்க்கமோ: 'ஜென்னத்தில் பிருதவ்ஸ்' என்று சொல்லப்படும் இந்த சொர்க்கலோகத்தில் பொழுது நிலவும் கிடையாது. அதற்கு ஒளியாகிறது அல்லாஹு தஆலாவுடைய அர்ஷின் சுடர் ஒளிவு வெளிச்சமா யிருக்கும். இன்னும் அல்லாஹு தஆலா நூறு றஹ்மத்து வைத்திருக்கின்றான், அதில் ஒன்றைப் பூமியில் மழையாக வர்ஷிக்கும்படி செய்து வைத்திருக்கிறான். மீதி ரஹ்மத்து தொண்ணூத் தொன்பதையும் சுவர்க்கலோகத்தில் இனாம் கொடுக்க வைத்திருக்கிறான். அந்த ரஹ்மத்துகள் எவ்விதமானதென்று யாருக்கும் தெரியாது. இன்னும் நமது நபிகள் நாயகம் பிறந்தவுடனே அல்லாஹு ஸுபுஹானஹு தஆலா 'வாரும் ஜிபுரீலே! என்னுடைய தோழராகிய நபி நாயகம், பக்கத்தில் பிறந்து இருப்பதால் நீர் இப்போது சுருக்காக போய் அவர்களை எடுத்து வந்து சொர்க்கலோகத்திற்கு கொண்டு போய் சுவர்க்கலோகங்களைச் சுற்றி பவனி வாரும்' என்று சொன்னான்.

அப்படியே, உடனே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபி நாயகத்தை அவர் கையா லெடுத்து சுவர்க்கலோகத்திற்கு கொண்டு போய், சுவர்க்கலோகங்களை சுற்றி பவனி வரும்போது, சுவர்க்கத்திலேயே இருக்கும் ஹூருல்ஈன் பெண்கள், முத்தினால் ஆலாத்தி எத்தி, "சுபசோபனம் சுபசோபனம்" என்று சொல்லிச் சொல்லி ரொம்பவும் சந்தோஷங் கொண்டாடினார்கள். இன்னும் அந்த ஹூருல்ஈன் பெண்கள், "நபி நாயகமே உங்களுடைய உம்மத்துகளைத் தானே எங்களுக்கு ரஹ்மான் புருஷர்களாக ஆக்கி வைத்திருக்கிறான்! எங்கள் புருஷன்மார்களாகிய அவர்கள் எங்களிடத்திற்கு எப்போது வருவார்களோ" என்று சொல்லிச் சொல்லி, ரொம்பவும் சந்தோஷமா யிருப்பர். அப்போது அந்த நேரத்தில் ரஹ்மான், "வாருங்கள், என்னுடைய பணிவிடைகள் கேட்ட மலக்குகளே, என்னுடைய தோழராகிய நபி நாயகத்தைச் சுவர்க்கலோகத்தைச் சுற்றிப் பவனி வருவதால், எனக்கு ரொம்பவும் சந்தோஷமாகி விட்டது.



நீங்கள் இப்போது சுருக்காகப்போய், என் பைத்துல் மாலைத் திறந்து பாருங்கள். அநேகங் கோடி கோடிகளான நகைகளான ஆபரணங்கள் இருக்கும். அவைகளை நீங்கள் எடுத்துச் சுவர்க்கலோகத்திலே வாரி வாரி போடுங்கள்" என்று உத்திரவு செய்தான். அதுபோலே மலக்குகள் பைத்துல் மாலைத் திறந்து அநேகமான பட்டுகளையும் அநேகங்களான நகைகளான ஆபரணங்களையும் எடுத்து வாரி வாரி சுவர்க்கலோகத்திலே சூறை சூறையாய் விட்டார்கள். அவைகளைச் சொர்க்கலோகத்திலே யிருக்கும் ஹூருல்ஈன் பெண்கள் கண்டு, உனக்கு முந்தி, எனக்கு முந்தி, என்று ஓடி, ஓடி, அநேக விதங்களான பட்டு பட்டாவளிகளையும் அநேக விதங்களான நகை ஆபரணங்களையும் ஓடி ஓடி யெடுத்துக் கொண்டு, "எங்கள் புருஷர்மார்கள் எப்போது எங்களிடத்தில் வருவார்களோ, நாங்கள் இந்த பட்டுகளையும் உடுத்தி, நகைகளான ஆபரணங்களையும் எங்கள் திரேகங்களிலணிந்து, நாங்களும், அவர்களும் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருக்க வேண்டும்" என்று சொல்லி அவர்கள் அவை எல்லாவற்றையும், அவர்கள் வைக்கும்படியான இடங்களில் கொண்டுபோய் வைப்பார்கள்.

இப்பேர்ப்பட்ட நிஃமத்துகளெல்லாம் அல்லாஹு தஆலா நமக்குத்தான் வைத்திருக்கிறான். நீங்கள் பார்த்திருக்க அநேகம் அநேகம் பேர்கள், அதிகமான திரவியங்களைச் சம்பாதித்து வைத்துக்கொண்டு அநேக விதங்களான கிராமம், பூமி, தோட்

டங்களை வாங்கியும், இன்னும் சிங்காரிப்பான மெத்தை வீடுகளைக் கட்டியும், அந்த வீடுகளுக்கு நாற்காலி மெத்தை திண்டு தலைகாணி வெண்சாமரை ஊஞ்சல் வகையறுக்கள் வைத்து, ரொம்பவும் சுகங்களைக் கொண்டாடி, இன்னும் ஆனை யேற்றம் குதிரைச்சவாரி, பல்லாக்கு ஏறும்பவுசுகள், வண்டிச்சவாரிகள், ஆளடிமைகள் வைத்து ரொம்ப ரொம்ப சுகங்களைக் கொண்டாடி னார்களே, அவர்கள் கொண்டாடிய தோட்டம் கிராமம் பூமிக ளெங்கே? இன்னும் அவர்கள் கட்டிய மெத்தை வீடுகளெங்கே? இன்னும் ஆனை யேற்றம் குதிரை சவாரிகளெங்கே? இன்னும் பல்லக்கு ஏறும் பவுசுகள் வண்டிச் சவாரிகளெங்கே? ஆளடிமை களெங்கே, இவைகளெல்லாம் நீங்கள் பார்த்திருக்க அவைக ளெல்லாம் அழிந்து வீடுகளும் அழிந்து, அவர்களும் அழிந்து பனுவாகப் போய் விட்டன, இதெல்லாம் உங்களுக்குத் தெரிய வில்லையா?

இந்தத்துனியா வாகிறது, நமக்கு விருந்தாளியாய் தந்த தலங்களா யிருக்கும். இந்த தலங்கள் நமக்கு யாதாமொரு சொந்த மில்லையே. நமக்கு முந்தி அநேக வீரர்களும் அநேக பவுசு கொண்டாடிய பேர்களும் இறந்து மண்ணென்னப்படும் அறை வீட்டுக்குள் அவர்கள் போய் படுத்தது உங்களுக்குத் தெரியவில்லையா? நாமெல்லோரும் மவுத்தை விட்டும் ஒருபோதும் தப்பிக்க போகிறதில்லை. நாம் கோடான கோடியான திரவியங் களைச் சம்பாதித்துக் கொண்டு, அநேகவிதமான சொகுசுகளாக இருந்திட்டாலும், நாம் மவுத்தாகி, அறை வீட்டுக்குள் போய் புகுந்து விடுவோம். நல்ல அமல்களைச் செய்து நலங்களைப் பெற்றுக் கொண்ட பேர்கள் சுவர்க்க வழியைக் காணுவார்கள். கெடுதலையான செயல்களைச் செய்து அமல்களைப் பெறாத பேர்கள், மவுத்தானால் அவர்களை மண்ணென்னப்பட்ட அறை வீட்டுக்குள் அடக்கி, ஏமுடி யெடுத்து வைத்தபின், அவர்களுக்கு அங்கே நடப்பது என்னவென்றால், முன்கர் நகீர் என்ற மலக்கு எவ்விதமாக வருவார்களென்றால்:—

## தொங்கல்

நான்முக நெருப்பாலே நான்முக மாகிவந்தால் அவர்கள்
நாடுவழும்ப மாட்டாமல் நரகமது சேர்வார்.



அவர்கள் நாலுமுக நெருப்பினாலேயும், அவர்கள் வாய் ஏழுதடு கீழ் பூமியுடன், மேலுதடு உயரமாகவும்; அதற்கு ஏற்ற பருப்பமும், அதற்கேற்ற உயரமும் அதற்கேற்ற தலையுமாக வந்து அவர்கள் நெருப்பினால் கையில் பிடித்திருக்கும் தண்டா யுதத்தை 'மன்றப்புக்க' என்று கேட்டு ஊன்றி அந்தந்த தடி யினாலே ஓங்கி ஓங்கி அடிப்பார்கள். அந்த அடி அவர்கள் மேலே பட்டவுடனே, பஞ்சுபோல பறந்துபோய் விடுவார்கள். அவர்கள் பஞ்சுபோல் போனதை மறுபடி அவர்கள் கையினாலே திரட்டிப் பிடித்துக் கூட்டி ஒரு பக்கம் வைத்து, மறுபடியும் அவர்களை முன்போலவே ஹயாத்தாக்கி வைத்து, மறுபடியும் அந்த நெருப்புத் தடியினாலே ஓங்கி அடிப்பார்கள்.

முன்போலப் பஞ்சாகப் பறந்து விடுவார்கள். மறுபடியும் அந்தப் பஞ்சைக் கூட்டித் திரட்டி முன்போல அவைகளை ஹயாத்தாக்கி வைத்துக் கொண்டு, நெருப்புத் தடியினாலே ஓங்கி அடிப்பார்கள்.

இந்தவிதமாக, அவர்கள் 3-தரம் தண்டித்து விட்டு அவர்கள் திரும்பிப் போய் விடுவார்கள். கொஞ்ச நேரம் சென்று சில மலக்குகள் அவர்களிடம் வந்து, அவர்கள் கையினால் பிடித்திருக்கும் நெருப்புத் தூண்டியை, அவர்கள் தலை மேல் போட்டு கொளுவி, ஒருவர் உயரம் தூக்கிக் கொண்டே யிருப்பார். இன்னும் சில மலக்குகள் நெருப்பினாலே இரும்பு ஆணி யெடுத்து அவர்கள் தலை மண்டையிலே குத்தி, நெருப்பு சுத்தியில் ஓங்கி அடிப்பார்கள். அந்த அடியானது அவர்கள் மண்டையை பிளந்தும் நாக்கைப் பிளந்தும் வெளியே வந்து நிற்கும்.

இன்னும் சில மலக்குகள் நெருப்பினாலே "சுக்குமாந்தடி" என்ற தடி யெடுத்து ஓங்கி யடிப்பார்கள். இன்னுஞ் சில மலக்குகள் நெருப்புப், 'பத்துக்கொறடு' கொண்டு அவர்களு டைய மேனி சரீரம் துடை இதுகளைப் பிடுங்கி இழுப்பார்கள். அந்த வேதனைகள் பொறுக்க இயலாமல், "அப்பா! அம்மா! இந்த வேதனைகள் பொறுக்க முடியவில்லையே; எங்களைக் கொஞ்ச நேரம் பூலோகத்துக்கு போக விட்டால், நாங்கள் வைத் திருந்த வீடு, வாசல், தோட்டம், நகை, பணங்காசுகள் இவைக

னெல்லாம் எடுத்து, ஜக்காத்து, சதக்காக்கள் கொடுத்து, வீடு, வாசல்களையும், தோட்டங்களையும், அநேகமா யிருந்தாலும் அவைகளை விற்றுப் பள்ளிவாசல்களை கட்டி ஏழை மிஸ்கீன்களுக்கு கொடுத்து விட்டு, கொஞ்ச நேரத்திற்குள்ளாக நாங்கள் வந்து விடுகிறோம்'' என்று சொல்லிச் சொல்லி ரொம்பவும் கெஞ்சி கெஞ்சி மலக்குகளிடத்தில் கேட்டு அழுவார்கள். அப்போது மலக்குகள், ''அட பாவியான மூடர்களே, இதற்கு முந்தி உங்களுக்கு புத்தி எங்கே போய் விட்டது. சொற்களையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளையும் நீங்கள் எடுத்து நடந்திருந்தால் உங்களுக்கு இந்த அதாபு வர மாட்டாதே; நீங்களும் சுகமாக சுவர்க்க லோகத்தை பெற்றவர்களாக யிருப்பீர்களே! நீங்கள் பூலோகத்தில் இருக்கும் போது, அல்லாஹு தஆலா சொல்லிய சொற்களை எடுக்காமலும், நபி நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளைப் பேணாமலும், நீங்கள் பூலோகத்தில் உங்கள் பிரியப்படி கெட்ட செயல்களை செய்கிறதும், கள் சாராயங்களைக் குடிக்கிறதும், ஜினாக்கள் செய்கிறதும், வட்டி வாங்குகிறதுமான பாபத்தில் மிகுதமா யிருந்தீர்களே! இப்போது எங்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டீர்களே! நீங்கள் என்னமாய் அழுதாலும், என்னமாய் கெஞ்சினாலும் மலைக்கடல் உருகி விட்டாலும், எங்களுடைய மனதில் ஒரு கடுகளவு மிரக்கம் வராது. இப்போது நீங்கள் என்ன விதமாய்க் கெஞ்சி அழுதாலும் நாங்கள் உங்களை விட்டு விடப் போகிறதில்லை. புலியின் கிட்டே மான் குட்டியானது வந்தால், தப்பித்து போய்விடுமா? அதைப்போல் நீங்கள் எங்கள் கிட்டே வந்து அகப்பட்டுக் கொண்டீர்களே! ஒரு போதும் உங்களை நாங்கள் விடப் போகிறதில்லை'' என்று சொல்லி இந்த அதாபுகள் உங்களுக்கு பத்தாது என்று அவர்களை எடுத்து நரகமெனப்படும் கொடூரமாகிய தலத்தில் கொண்டுபோய் விடுவார்கள்.

அந்தத் தலத்திலிருக்கும் பாம்புகள் யாரசலேயும் மகா கொடுமையென்று சொல்லப்படும். அந்த தலத்திலிருக்கும் நெருப்பு ஒரு கடுகு அளவில், பூமியில் தவறி விழுந்து விட்டால் பூமி எல்லாம் வெந்து சாம்பலாகிப் போய் விடும். இன்னும்



அவைகளிலே யிருக்கும் தேள், கொஞ்சம் பூமியை கொட்டினால் அந்த விஷம் பட்டவுடனே பூமி தண்ணீராகிப் போய்விடும். இதைப்போல ஆயிரம் பங்கு அதிகமான பாம்புகள் அதில் இருக்கும். நரகவாதிகளை அந்தத் தேள்கள் கொட்டவும், பாம்புகள் கொத்தி கொத்தி அவர்களுடைய சதைகளைக் கடித்து கடித்து பிடுங்கிப் பிடுங்கி, வேதனைகள் செய்துக் கொண்டிருக்கும்.

முஸ்லிம்களே! எந்நேரமும், நரகவாதிகளை இம்சைப் படுத்திக் கொண்டே யிருக்கும். இன்னும் ஆலிம்களென்றும் உலமாக்களென்றும் சொல்லப்பட்ட பொருளானது சொன்னச் சொல்லைச் சொல்லப்பட்ட பேர்கள் அதாவது அல்லாஹு தஆலா சொல்லிய சொல்களைச் சொல்லி வேதக் கட்டளைகளை மனிதர்களுக்குப் புகட்டி வைக்கும்படியான பொருள்களா யிருக்கும். அவர்கள் சொல்லுகிறது ஒரு அணுவளவில் பிசகில்லாத சொற்களா யிருக்கும், அல்லாஹு தஆலா வேதங்களில் சொல்லப்பட்ட சொற்களைத்தான் சொல்லுவார்கள். நமது நபி நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள்:—

மூமின்களே! நீங்கள் பிற்காலம் ஆலிம்களுக்கு சங்கை செய்தால் எனக்குப் பத்துப் பங்கு சங்கை செய்த மாதிரியாய் யிருக்கு மென்றும் திருவுளமா யிருக்கிறார்கள். நீங்கள் ஆலிகம்ளுக்கு ரொம்பவும் சங்கைச் செய்ய வேண்டியது. நீங்கள் பூலோகத்திற்கு வரும்போது பணங் காசுகளைக் கொண்டு வந்த பேர்களில்லையே! நீங்கள் பூலோகத்தை விட்டு போகும் போது பணங் காசுகளைக் கொண்டு போகிறதில்லையே? நன்மை செய்து பெற்றுக் கொண்டு போனால் நல்வழி யென்ற சுவர்க்க பதி யடைவீர்கள். தீமையைச் செய்து பெற்றுக் கொண்டு போனால் நரகமெனப்பட்ட கொடூரமான பதவியை யடைவீர்கள். அப்படிக்கு வீணாகப் போகாமல் அல்லாஹு தஆலா சொல்லிய சொற்களையும், நமது நபி நாயகம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளையும் நீங்கள் உணர்ந்து பயந்து நடக்க வேண்டியதில் முதலாவது தொழுகையாக விருக்கும். யாதாமொருவன் தொழுகையை விட்டிருந்து அவர்கள் அநேகம்

களான ஜக்காத்து சதக்காக்கள் கொடுத்திட்டாலும் அவர்கள் கொடுக்கப்பட்ட கொடைகள் ஒன்றும் கபூலாக மாட்டாது.

எல்லா வணக்கத்துக்கும் முதலாவது தொழுகையாயிருக்கும். தொழுகை விட்டவனுக்கு ஒரு பதவியும் கொடுக்கப்பட மாட்டாது. தொழுகையில்லாதவனுடைய வணக்கம் ஒன்றும் கபூலாக மாட்டாது. தொழுகையை விட்டிருப்பானாகில் அவன் நபி நாயகம் உம்மத்துகளை விட்டும் இபுலீசுடைய மக்களாகிப் போய் விடுவான், தொழுகையை விட்டவனுக்கு ஒரு போதுங் கெதி கிடையாது. யாதாமொருவன் தொழுகையை விட்டிருப்பானாகில் அவர்களெல்லோர்களையும் இபுலீசு மக்களென்றுஞ் சொல்லப்படும். கின்ஸிரென்றுஞ் சொல்லப்படும். பன்றியென்றுஞ் சொல்லப்படும், ஜாஹிலென்றுஞ் சொல்லப்படும். முனாபிக்கென்றுஞ் சொல்லப்படும்.

தொழுகாதவன் மவுத்தானால் அவனைத்தொட்டு குளிப்பாட்டினால் பாவியாகப் போய் விடுவார்கள். அவனை யடக்கினாலும் ஹீஞ்சாராகப் போய் விடுவார்கள். இத்தப்படிக்கு திட்டவட்டமாக நமது நபி நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். இந்த பூலோகமாகிறது ஒரு அற்ப நேரத்து வாழ்வும், நாம் விருந்தாளியாய் வந்த தலங்களாகவு மிருக்கும். இந்த வாழ்வை நீங்கள் எப்பவும் சதமென்று நம்ப வேண்டாம். நமக்கு மவுத்தென்னப்பட்ட மாலை ஒன்று நமது கழுத்தில் கிடக்கிறது. நமக்கு இன்ன நேரத்தில் மவுத்து வரும் என்று என்ன நம்பிக்கை யிருக்கிறது. அதுகளை நீங்கள் கொஞ்சமாவது எண்ணாமல் மறந்துவிட்டு அமல்களை செய்யாமல் வீண் போக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

அப்படிக்கு நீங்கள் வீண்காலம் போக்கினால் நல்ல வழியென்ற அமலை எப்போதுதான் செய்கிறது. நீங்கள் மவுத்தானீர்களானால் பணங்களெங்கே, வீடு வாசல் தோட்டங்களெங்கே, நாமம் பூமிகள் குதிரைச் சவாரிகளெங்கே? இன்பம் சுகங்களோடு அனுபவித்த பெண்சாதி பிள்ளைக் குட்டிகளெங்கே? மெத்தை தின்டு தலைகாணி சொகுசான உடுப்புக்கள் சமுக்காளம் விரித்து அனுபவித்த விடங்களெங்கே? ஆனடிமை



வைத்து ஏறிய வண்டிச் சவாரிகளான வாகனங்களெங்கே? நீங்கள் ரொம்பவும் துப்புரவாக உடுத்திய உடுப்புகளெங்கே? இதுகளெல்லாம் அழிந்து பனுவாகி போய் விடும்.

இதுகளெல்லாம் உங்களுக்கு ஒரு அணுவளவும் உங்களுடன் வர மாட்டா. நீங்கள் செய்கின்ற நல்ல நடத்தையான நல்ல அமல்கள் தான் உங்களுக்கு முன்னே வந்து சுவர்க்க லோகத்திற்கு வழிகாட்டி வைக்கும். இந்த பூலோக வாழ்வை சதமென்று நம்பி அந்த ஜஹன்னத்தில் முழுகிட வேண்டாம். உங்களிடத்தில் பணங் காசுகள் இருந்தால், உங்களாலியன்ற மட்டுக்கும் அல்லாஹ்வுடைய வீடாகிய பள்ளிவாசல்களைக் கட்டுங்கள், ஜக்காத்து சதக்காக்கள் கொடுத்து பசியாற்றுங்கள்! எல்லா உயிர்களையும் தன் உயிர் போலெண்ணிப் பாதுகாருங்கள், றமலான் மாதத்தில் முப்பது நோன்புகளைப் பிடித்து, ஏழைப் பெண்களை கட்டிக்கொடுங்கள்; சாராயம் ஜினா வட்டி இவைகளை விலக்கி கெட்ட சொல்லை நீக்குங்கள். நீங்கள் நல்வழியென்ற செயலை செய்தால் ரஹ்மான் உங்களுக்கு கூலி கொடுப்பான்.

அந்தக் கூலி எவ்விதமான தென்றால்:—ஏழாவது சுவர்க்க லோகத்தில் மகா நவநீதம், அழகு வடிவு ஒளிவு பொருந்திய 70 வீடுகள் கொடுக்கப்படும். ஒவ்வொரு வீட்டிலும் நாறு நாறு ஹூருல்ஈன் பெண்களையும் கொடுப்பான். அந்தந்த வீடுகளில் நீங்கள் போயிருந்து, மகா மதுரமுள்ள உணவுகள் அருந்தி நீங்களும் ஹூருல்ஈன் பெண்களும் மகா சுகங்கள் அனுபவித்து மவுத்தில்லாமல் அந்த விடத்தில் ஊழி ஊழி காலம் வரைக்கும் தரிபாடா யிருப்பீர்கள்.

யாராவது பணங்களை அதிகமாகச் சேகரஞ் செய்து வைத்துக் கொண்டு, தொழாமலும், நோன்பு பிடியாமலும், ஜக்காத்து சதக்காக்கள் கொடுக்காமலும், ஈகை இரக்க மில்லாமலும், அல்லாஹ்வுடைய வீடாகிய பள்ளிவாசல்களுக்கு வந்த ஏழை மிஸ்கீன்களை விசாரியாமலும், அல்லாஹ்வுடைய வீடாகிய பள்ளிவாசல்களைக் கட்டாமலும், தானிருக்கும்படியான நல்ல மாதிரியான வீடுகளை கட்டியும், அதில் மெத்தை தின்டு தலைகாணி வெண்சாமரை கட்டில் ஊஞ்சல் வகையாக்களை

வைத்து சுகங்களனுபவித்து அந்தகார சாகரத்தில் மூழ்கி மவுத்தானால், அவன் பாவியாகி நரகமென்னும் ஓடையில் போடப் படுவான்.

அங்கே நெருப்பு என்னப்படும் தண்ணீரை ஜபானியாக்கள் என்ற மலக்குகள் வாரி, வாரி, அவன் வாயில் ஊற்றிக் கொண்டே யிருப்பார்கள். இன்னும் அந்த ஓடையில் மலைப் போல் நெருப்பினால் ஆன பாம்புகள் வந்து அவன் மேல் விழுந்து துடை சரீரம், முகம், கை, கால் இவைகளைக் கடித்து பிடுங்கி உதறிக் கொண்டே நிற்கும். இன்னும் சில மலக்குகள் வந்து நெருப்பினாலான இரும்புச் சங்கிலி கொண்டு வந்து, அவனுடைய காலிரண்டையும் கட்டி, குப்புறக் கவிழ்த்து பரபர வென்று இழுத்துக் கொண்டே யிருப்பார்கள். இந்தப்படி அவன் ஊழி ஊழி காலம் வரைக்கும், அந்த நரக ஓடையிலே அழுந்தி, தரிபாடாக யிருப்பான். அல்லாஹு தஆலா சொல்லிய சொற்களையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லிய சொற்களையும் நீங்கள் பேணுதலாக எடுத்து நடந்து வந்தால் நல்வழி என்ற சொர்க்கபதவி யடைவீர்கள்.

ஆமீன், ஆமீன், யாறப்பல் ஆலமீன்.

ஞான சொர்க்க பதி முற்றுப் பெற்றது.

பிஸ்மில்லாஹி

இஃது

# ஆதுமகன் ஷத்தாது

## பூலோகத்தில் சுவர்க்கம் கட்டிய கிஸ்ஸா

ஷத்தாது என்ற கொடுங்கோல் மன்னன் எப்படிப்பட்டவனென்றால்:—அவன் தாயார் வயிற்றில் கெர்ப்ப சிசுவாயிருக்கும் போது அந்தத் தாய் பெண் பிள்ளையும், இன்னஞ் சில பேர்களுமாக கப்பலில் ஏறிப் போனார்கள். அந்த நேரத்தில் காற்று அடித்து, கப்பல் உடைந்து போய் விட்டது. அதனால் அநேக ஜனங்கள் இறந்து போய் விட்டார்கள். அப்போது இந்த பெண் பிள்ளைக்கு ஒரு பலகை வந்து எதிர்ப்பட்டது. அந்தப் பலகையில் இந்தப் பெண் பிள்ளை உட்கார்ந்திருந்தாள். அந்த நேரத்தில் உடனே அந்த பெண் பிள்ளைக்கு இடுப்புவலி உண்டாகிப் பிள்ளை பிறந்து விட்டது. மாவுங் கொடியும் வராமல் அவள் வயிற்றில் இருக்கும் நேரத்தில், அல்லாஹு ஸுபுஹானஹு தஆலா, இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாத்தை கூப்பிட்டு, "ஓ இஸ்ராயீலே! நீர் சுருக்காகப் போய்; அந்தப் பலகையின் மேல் இருக்கும் பெண் பிள்ளையுடைய ரூஹை வாங்கி வாரும்" என்று சொன்னான். அப்போது இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம், சுருக்கமாகப் போய்ப் பார்த்தார்கள். பிள்ளை பிறந்து இருக்கிறதையும், அந்தப் பெண் பிள்ளை வயிற்றில் மாவுங் கொடியும் வராமல் வயிற்றில் இருக்கிறதையும் பார்த்து, அவர்கள் ரொம்ப இரக்கப்பட்டு, மறுபடியும் அந்த ரஹ்மான் இடம் திரும்பிப் போய், "ரஹ்மானே! நான் போய் பார்த்தேன். ஒரு பலகை துண்டில், பிள்ளைப் பிறந்து இருக்கிறதையும் அந்த பெண் பிள்ளை வயிற்றில் மாவுங் கொடியும் வராமல் இருக்கிறதையும் நான் பார்த்து இரக்கப்பட்டு, உன்னிடத்தில் சொல்ல வந்தேன்" என்று சொன்னார்கள். அப்போது ரஹ்மான், "ஓ இஸ்ராயீலே, அதற்கு காரணம் நீரோ, நானோ? இப்போ நீர் சீக்கிரமாகப் போய் அந்தப் பெண் பிள்ளையுடைய உயிரை வாங்கி வாரும்" என்று சொன்னான். மறுபடியும் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, அந்தப் பெண் பிள்ளை

யுடைய றூஹை வாங்கிக் கொண்டு போனார்கள். அப்போது அந்தப் பெண் பிள்ளைத் தவறி கடலில் விழுந்து விட்டாள்.

அந்தப் பிள்ளை பலகைமேல் இருந்தது. கடல் அலைகள் அசைய அந்தப் பலகை அசைந்து அசைந்துக் கொண்டே வந்து, கரை ஓரமாக கிட்டேவர, ஒரு பெரிய காற்று வந்து அடித்து, பலகையை தூக்கி கடற்கரை மண்ணில் போட்டு விட்டது. அப்போது 5 நாளைக்கு முந்தி ஒரு புலி குட்டிப் போட்டு, அந்தப் புலிக்குட்டி செத்துப் போய் விட்டது. அந்தப் புலிக்கு பால் முறுகி வேதனை பொறுக்க மாட்டாமல் மாரை காடுகளிலே உரசிக்கொண்டே வந்தது. இந்தப் பிள்ளை இருக்கும் இடத்துக்கு நேராக ஒரு செடி 2 கவட்டையாக விரித்துக் கொண்டிருந்தது. அந்தக் கவட்டையில் இந்தப் புலி மாரை வைத்து தேய்த்தது, அந்தக் கவட்டைக்கு நடுவில் இந்தப் பிள்ளை வாயைத் திறந்துக் கொண்டிருந்தது. அதினுடைய முலைக் காம்பு அந்தப் பிள்ளையினுடைய வாயில் பட்டது. அப்போது அந்தப் பிள்ளை வாயைத் திறந்து புலியின் முலைக் காம்பைப் பிடித்து சுவைக்க சுவைக்க புலிக்கு ரொம்ப சுகமா யிருந்தது. வேதனை எல்லாம் நீங்கி விட்டது. புலி வெகு நேரமட்டும் பிள்ளைக்குப் பால் கொடுத்துக் கொண்டே யிருந்தது. அப்புறம் புலி காட்டுக்குப் போய் விட்டது.

மறுபடியும் புலிக்குப் பால் கட்டின உடனே பிள்ளைக்கு வந்து பால் கொடுக்கும். இப்படியாக தினந்தோறும் புலி பிள்ளைக்கு வந்து பால் கொடுத்துக் கொண்டே யிருந்தது. பிள்ளையும் 40-நாளைக்குள்ளாக ஒரு வருஷம் ஒன்றரை வருஷத்துப் பிள்ளையைப் போலாகி விட்டது. அந்தப் புலியுடன் இந்தப் பிள்ளையும் காட்டுக்கு கூடத் தொடர்ந்து போகும். புலி 10 அடி பாய்ந்தால் பிள்ளை 16 அடி பாயும் இவ்விதமாக அந்தப் பிள்ளை புலியின் கூட அந்தக் காட்டில் திரியும் காலத்தில், ஒரு நாள், அந்த ஊர் இராஜாவிடத்திலிருந்த வேடர்கள், அந்தக் காட்டுக்கு வேட்டையாட வந்தார்கள். காட்டில் வேட்டை மான், மரை, முயல் இவைகளை யெல்லாம் பிடித்துக் கொண்டு வரும்போது, வருகிற வழியில் புலித் தடமும் பிள்ளை தடமும் ஒன்றாக நெருங்கி யிருக்கிறதைக் கண்டு, அந்த வேடர்கள், "இதென்ன அதிசயம்,



இந்தக் காட்டில் புலித் தடமும் பிள்ளைத் தடமும் ஒன்றாக யிருப்பதை நமது ராஜாவிடத்தில் சொல்ல வேண்டும்" என்று வந்து, இவர்கள் வேட்டையாடிய சாமான்களை யெல்லாம் ராஜா முன்னில் வைத்து, "ஓ இராஜாவே! இப்போது இந்தக் காட்டில் நாங்கள் ஒரு அதிசயங் கண்டோம். அது எங்களுக்கு ரொம்ப புதுமையாக இருக்கின்றது; அந்தச் சேதியை தங்களுக்கு சொல்ல வந்தோம்" என்று சொன்னார்கள். அது என்ன புதுமை என்று ராஜன் கேட்டான். அப்போது அவர்கள் சொன்னதாவது, "நாங்கள் காட்டில் வேட்டையாடித் திரும்பி வரும்போது, இந்தக் காட்டுக்கு நேராக வருகையில், பிள்ளைத் தடமும், புலித் தடமும் ஒன்றாக நெருங்கி யிருந்தது. நாங்கள் அதைக் கண்டு ரொம்பவும் புதுமைப்பட்டு இச்சேதியைத் தங்கள் இடத்தில் சொல்ல வேண்டு மென்று வந்தோம்" என்று சொன்னார்கள்.

அந்தச் சேதியை ராஜா கேள்விப்பட்டு, ரொம்ப ஆசையாய் புதுமைப்பட்டு, "ஓ வாருங்கள் காட்டில் வேட்டை யாடும் வேடர்களே! நீங்கள் இப்போது ஒரு நாழிகைக்குள் ஆயிரம் பேர்கள் போய், அந்தக் காட்டைச் சுற்றி உருக்கு வலைகளை வீசி புலியையும் அந்தப் பிள்ளையையும் பிடித்துக் கொண்டு வாருங்கள்" என்று சொன்னான். அது கேட்டு வேடர்கள் ஆயிரம் பேர் காட்டுக்குப் போய், வலைகளை காட்டில் இடமில்லாமல் கட்டி, காட்டைக் கலைத்தார்கள். அப்போது புலியும் பிள்ளையும் இந்த வலையில் அகப்பட்டுக் கொண்டன. ஆனால் புலியானது வலையை பிய்த்துக் கொண்டு போய் விட்டது. பிள்ளை வலையில் அகப்பட்டுக் கொண்டது. அந்த வேடர்கள் ஓடிப்போய் பிள்ளையை எடுத்து வந்து ராஜா இடத்தில் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

அந்த ராஜா ரொம்பவும் புதுமைப்பட்டு, பிள்ளையை ரொம்ப பிரியமாகத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு, நல்ல மதுரமுள்ள சோறுகளாக தின்னக் கொடுத்தான். அந்தப் பிள்ளை சோறு தின்னவில்லை. மறுபடியும் வாழைப்பழம், மாம்பழம் இன்னுஞ் சில கனிவர்க்கங்களையும் தின்னச் சொல்லி கொடுத்தான். அவைகளை அந்த பிள்ளை தின்னவில்லை. ராஜா ரொம்ப

விசாரப்பட்டு இதற்கு என்ன யோசனை யென்று ஆலோசித்து, நல்ல வேலைச் செய்யும் தச்சர்களைக் கூப்பிட்டு, "ஓ தச்சர்களே, நீங்கள் இப்போது ஒரு நாழிகைக்குள்ளாக பெரிதாக கிளிக் கூண்டைப்போல் 40 கூண்டுகள் செய்யுங்கள்" என்று உத்திரவு செய்தான்.

அது போலவே, அவர்கள் 40 கூடும் செய்து கொடுத்தார்கள். 39 கூட்டை சுற்றி வைத்து நடுவில் ஒரு கூட்டை வைத்தான். நடுக்கூட்டில் இந்தப் பிள்ளையை வைத்து, மற்ற கூடுகளில் ஒன்றொன்றுக்கு ஒவ்வொரு சிறு பிள்ளையாக வைத்து அந்தப் பிள்ளைகளுக்கு சோறுகளும் அநேகமான கனிவர்க்கங்களும் முன்னால் வைத்தான். 'அந்தப் பிள்ளைகள் சோறு தின்கிறதைப் பார்த்து இந்தப் பிள்ளையும் தின்னும். அந்தப் பிள்ளைகள் கனிவர்க்கங்கள் தின்கிறதைப் பார்த்து இந்தப் பிள்ளையும் தின்னும்; இப்படியாக கொஞ்ச காலைக்குப் பிறகு, அந்தக் கூட்டை விட்டுப் பிள்ளையை வெளிப்படுத்தி ரொம்ப அருமையாக வைத்து வளர்த்தான். பிள்ளையும் பெரிதாகி விட்டது. இந்த பிள்ளையின் கூட மற்ற 39 பிள்ளைகளும் கூடத் திரியும். அப்படி யிருக்கும் காலையில், பிள்ளைக்கு 16-வயதாகி விட்டது.

ஷத்தாது என்ற பிள்ளை வில்லம்பு சரிகட்டி எக்காலும் அந்த வில்லை யெடுத்துக் கொண்டு, இந்த 39-பிள்ளைகளையும் கூட கூட்டிக் கொண்டு காட்டுக்குப் போய் வேட்டை யாடுவான். எந்தெந்த மரம் எவ்வளவு உயரமாக இருந்தாலும் அந்தந்த மரங்களிலே இருக்கும் பட்சி சாரங்களை அவன் கையில் உருண்டையால் ஒரே தெரியாகத் தெரிப்பான். இன்னும், "அடே, இதோ பாருங்கள். அந்த பட்சிசாரத்தைக் கொண்டு குறிபார்த்து எறிகிறேன்" என்று சொல்லித் தெரிப்பான். அதுபோல அந்த வில் உருண்டை அந்த பட்சிசாரத்தின் சுண்டில் பட்டு கீழே விழும் இன்னும், "அடே; இதோபார், அந்த பட்சிசாரத்தின் நெஞ்சுக்கு தெரிக்கிறேன்" என்று சொலலி தெரிப்பான். அது போலே அந்த வில் உருண்டை பட்சிசாரத்தின் நெஞ்சில் பட்டு கீழே விழும். இந்த மாதிரியாக அவன் வைத்த குறி தப்பாமல் அந்தக் காட்டில் வேட்டையாடிக் கொண்டு திரியுங் காலத்



தில் ஒரு நாள் காட்டுக்கு வழக்கம்போல் வேட்டையாடப் போனான்.

அந்த நேரத்தில், ஒரு மரத்தின் மேல் ஒரு புறு இருந்து கூவிக் கொண்டிருந்தது. இவன் கையில் வில்லெடுத்து மடியில் போட்டிருக்கும் உருண்டை ஒன்றெடுத்து, அந்தப் புறுவைப் பார்த்து தெறித்தான். அந்த உருண்டை புறுவின் மேல் படவில்லை. பின்னும் அந்த புறு மரத்தின் மேல் கூவிக் கொண்டே யிருந்தது, இவன் எண்ணியது, 'நாம் இதுவரையிலும், வைத்த குறி தப்பவில்லையே' என்று எண்ணி வில் கயிற்றை ஒரு தரம் இழுத்துப் பார்த்து மறுபடியும் ஒரு உருண்டை யெடுத்து தெரித்தான். அந்த உருண்டையும் புறுவின் மேல் படவில்லை. "ஆகா, இதென்ன புதுமையாக இருக்கிறது" என்று எண்ணி வில்லில் போட்டிருந்த கயற்றைக் கழட்டி இழுத்தும் பார்த்து, அதற்கு நல்ல மெருதக்களும் கொடுத்து, மறுபடியும் கயிற்றை வில்லில் போட்டு ஒரு உருண்டையை யெடுத்துத் தெரித்தான். அந்த உருண்டையும் அந்த புறுவின் மேல் படவில்லை. அந்த புறுவும் கூவிக் கொண்டே யிருந்தது. இவன் ரொம்பவும் கோபமாகி 3 உருண்டைகளும் தப்பிப் போய் விட்டதே என்று எண்ணி, அந்த வில் கம்பை இரண்டாக முறித்து கீழே யெறிந்து போட்டு, "ஓ வாருங்கள், ஒட்டர்களே! நீங்கள் இப்போது வீட்டிற்குப் போய், அரை நிமிஷத்துக்குள்ளாக 1000 மண் வெட்டி, 1000 கோடாலி, 1000 கத்திகள் எடுத்து வந்து, இந்த மரத்தை வேரோடு பிடிங்கி எறிந்து விட்டு, அந்த மரம் நின்ற இடத்தைச் சுற்றிக் குழி பருத்து பாருங்கள்" என்று கட்டளை யிட்டான்.

அதுபோலவே, அவர்கள் வீட்டிற்குப் போய் சமான்களை யெல்லாம் கொண்டு வந்து, இந்த மரத்தை வெட்டி வேரோடு பிடுங்கி தூரத்திலே யெறிந்து விட்டு அந்த மரம் நின்ற இடத்தை வெட்டிப் பார்த்தான். அங்கே ஒரு தெப்பக்குளம் இருந்தது. அந்தத் தெப்பக்குளத்துத் தண்ணீரை யெல்லாம் இறைத்துப் பார்த்தார்கள். அந்தத் தெப்பம் குளத்துக்குள்ளே கிணறு ஒன்றிருந்தது. அந்த கிணற்றுக்குள் இருந்த தண்ணீரை யெல்லாம் இறைத்துப் பார்த்தார்கள். அங்கே

ஒரு பெட்டகம் ஒன்றிருந்தது. அந்த பெட்டகத்தை உயர எடுத்துத் திறந்து பார்த்தார்கள். அதற்குள்ளே தயிலா பெட்டி ஒன்றிருந்தது. அந்த தயிலா பெட்டியைத் திறந்து பார்த்தார்கள். அதனுள் செப்பொன்றிருந்தது. அந்த செப்புக்குள் ஒரு சிமிழ் இருந்தது. அந்த சிமிழுக்குள் ஒரு வெள்ளிச் சிமிழ் இருந்தது. அந்தத் வெள்ளிச் சிமிழுக்குள் தங்கச் சிமிழ் ஒன்றிருந்தது. அந்தத் தங்க சிமிழுக்குள் ஒரு வைரம் அழுத்திய சிமிழ் இருந்தது. அந்த சிமிழைத் திறந்து பார்க்க மை இருந்தது. அந்த மையைக் கொஞ்சம் யெடுத்து அவன் கையில் போட்டுப் பார்த்தான். அவனுக்கு அர்ஷு, குர்ஸு, சொர்க்கம், நரகம் இன்னும் 10,000 ஆலமும் அவனுக்குச் சமீபமாகத் தென்பட்டன.

அவன், எல்லா அதிசயங்களையும் கண்டு இந்த சுவர்க்க லோகம் எழையும் நாம் கண்ணால் பார்த்தோம், நாம் இதற்கு மேல் அதிகமாக சுவர்க்கலோகங் கட்ட வேண்டுமென்று யெண்ணி ஒரு விஸ்தாரமான இடத்தைத் திட்டம் பண்ணி, அந்த இடத்தில் கட்டவேண்டு மென்று முடிவு செய்து இதற்கு தக்க கல்லுகள் கிடையாதே யென்று சொல்லி விசாரமாக இருக்கும் நேரத்தில் றஹ்மான் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமை கூப்பிட்டு, “வாரும் ஜிபுரீலே ஆதுமகன் ஷத்தாது பூலோகத்தில் சுவர்க்கலோகம் கட்ட நாடி தக்கபடிக்கு கல்கள் கிடைக்காமல் விசாரமாக இருக்கிறான். நீர் சுவர்க்கலோகத்தில் இருக்கும் கல்களை யெடுத்து வியாபாரியைப் போல கொண்டு போய், அவனிடத்தில் கொடும். அவன் நீர் கேட்ட தொகையைக் கொடுப்பான். அந்தப் பணங்களை நீர் வாங்கி, ஆற்றில் எறிந்து விட்டு வாரும்” என்று சொன்னான். அதுபோலவே, அவர்கள் சுவர்க்கலோகத்தில் இருக்கும் கல்களைக் கொண்டு போய், விலை பேசினார்கள். இவர்கள் கேட்ட தொகை கொடுத்து கல்களை வாங்கினான். அந்த பணங்களை அவர்கள் வாங்கி ஆற்றில் யெறிந்து விட்டுப் போய் விட்டார்கள்.

இந்தப்படியாக அவர்கள் கல்கள் கொண்டு வந்து கொடுக்க கொடுக்க அவன் வாங்கி, நல்ல வேலை செய்யக்கூடிய தச்சர்களை சேகரஞ் செய்து 600 பேர் பண்பு செய்யும் தச்சர்களுக்கு ஒருவர்



எசமானாகவும், 1000 பேர்களுக்கு 100 பேர் எசமானாகவும், இந்தப்படிக்கு பண்பும் செய்யும் பேர்களாக 18 லட்சம் பேர்களுக்கு உத்திரவு செய்து எண்பதினாயிரம் பேர்களை எசமானாக நியமித்து, எடுபிடி வேலைக்கு நல்ல ஆள்களாக 12 லட்சம் பேர்களாகத் தேர்ந்து யெடுத்து அந்த 12 லட்சம் பேர்களுக்கு உத்திரவு செய்து நியமித்து ஒரு மாதத்தில் நடக்கும்படியான வேலைகளை 10 நாளில் நடக்கும்படி உத்திரவு செய்தான். அதுபோல அவர்கள் மாளிகையை ரொம்ப நவநீதமாக கட்டினார்கள். இன்னும் அவன் அந்த மையை யெடுத்து கையில் போட்டு பார்த்ததில் பூமியிலிருக்கும் புதையல்களெல்லாம் அவனுக்கு தெரிந்தன. அவைகளையும் வெட்டி யெடுத்து செலவு செய்தான். இன்னமும் அந்த மை யெடுத்து அவன் கையில் போட்டுப் பார்ப்பான். தங்க மலை, வெள்ளி மலை, பொன் மலை இவைகள் இருக்கும் இடங்களெல்லாம் அவனுக்குத் தெரிந்தன. அவைகளையும் ஆள்களை விட்டு வெட்டி யெடுத்து செலவு செய்வான். இப்படியாக அநேக விதமான பண்புகளாக அந்த இடத்தில் வீடுகள் செய்து அந்த வீட்டுக்கு தலைவாசல் படிக்கல் அகப்படாமல், அவன் ரொம்ப விசாரப்பட்டுக் கொண்டு இருக்கும் நேரத்தில் ரஹ்மான், “வாரும் ஜிபுரீலே, அவனுக்கு வாசல்படி இல்லாமல் ரொம்ப கவனமாக யிருக்கிறான். நீர் இந்த படியைக் கொண்டு போய் விலை கூறினால் அவன் ஓடி வந்து கேட்பான். நீர் சொன்ன விலையைக் கொடுத்து வாங்குவான்” என்று உத்திரவு செய்தான்.

அதுபோல், அவர்கள் படியை எடுத்துக் கொண்டு அவனிடம் வந்து விலை கூறினார்கள். அவர்கள் சொன்ன விலை பிரகாரம் அவன் தொகையைக் கொடுத்து வாங்கிக் கொண்டு போய், அதை படிமேல் வைத்துப் பார்த்தான். நூல் போட்டது போல் சரியாக யிருந்தது. அவன் ரொம்ப சந்தோஷப் பட்டு, ரொம்ப விஸ்தாரமாக ஒரு தங்க பலகை செய்து அதில் வாசகம் எழுதினான். அது என்ன வென்றால், “ஆதுமகன் ஷத்தாது கட்டின 8-வது சுவர்க்கம், ஜென்னத்து பிருதவஸ் என்றும் சொல்லப்படும்” என்று அந்தப் பலகையிலெழுதி, அந்த வாசல் முகப்பில் பதித்து வைத்தான். பின்னால் அவன் எண்ணியது இனி நாம் இந்த சுவர்க்கலோகத்துக்குள்ளே

போய், ஊழி காலம் வரையில் மவுத்து இல்லாமல் சுபசோபனங் கொண்டாடிக் கொண்டே இருக்க வேண்டுமென வெண்ணி தன்னுடைய காலாட்களைக் கூப்பிட்டு, "நான் காளை வாகனத்திலேறி நம் ஊர்களையெல்லாம் சுற்றி வந்து நாம் கட்டிய சுவர்க்க லோகத்துக்கு போக வேண்டும். நீங்கள் மாட்டு மந்தையில் போய் ரொம்பவும் திடமான மாடாகப் பார்த்து ஒன்று பிடித்து வாருங்கள்" என்று உத்திரவு செய்தான்.

அதுபோல, அவர்கள் மாடு பிடிக்க மாட்டு மந்தைக்குப் போனார்கள். அப்போது அல்லாஹுதஆலா இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கூப்பிட்டு, "வாரும் இஸ்றாயீலே, நீர் இப்போது சுருக்காகப் போய் காளை வாகன வடிவு எடுத்து அந்த மாட்டு மந்தையில் போய் நில்லும்; அவர்கள் எல்லோரும் மாட்டைப் பார்ப்பார்கள். அவர்களுக்கு ஒன்றும் பிடியாது. நீதான் அவர்களுக்கு மனம் பிடிக்கும். அவர்கள் உம்மைக் கண்டவுடனே இந்த மாடு ரொம்பவும் அழகாய் இருக்கிறதென்றெண்ணி சந்தோஷப்பட்டு உம்மை பிடித்துக் கொண்டுப் போய் விடுவார்கள். உமக்கு அநேகவிதமான ஜோடிப்புகளெல்லாம் ஜோடித்து, அதில் அவன் ஏறி ஊர் பவனி வந்து அந்த சுவர்க்க லோகத்துக்கு வருவான். அவன் சொர்க்க வாசற்படியில் ஒரு காலும் வெளியில் ஒரு காலுமாக இருக்கும்போது நீர் துள்ளி அவனை கீழே போட்டு விட்டு அவனுடைய ரூஹை வாங்கி வாரும்" என்று திருவுளமானான்.

அதுபோல் இஸ்றாயீல் காளை வாகனமாக வடிவெடுத்து அந்த மாட்டு மந்தையில் வந்து நின்றார்கள். மாடு பார்க்க வந்தவர்கள், எல்லா மாட்டையும் பார்த்தார்கள். அவர்களுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. இந்த மாடுதான் ரொம்ப உயரமாகவும் ரொம்ப வடிவமாகவும் ரொம்ப அழகாகவும் இருந்தது. இது தான் தேவை யென்று இந்த மாட்டைப் பிடித்துக் கொண்டு போய், ஷத்தாத் முன்னே விட்டார்கள். அவன் இந்த மாட்டைக் கண்டு ஆசைப்பட்டு, 'இதுநாள் வரையிலும் இந்த மாடு நம் மாட்டு சந்தையில் இருந்தது நமக்குத் தெரியாமலே போய் விட்டதே' என்று எண்ணி அந்த மாட்டை நல்லபடி ஜோடிப்புகளாக ஜோடிக்கச் சொன்னான். இதுபோல் அவர்கள் நவீனமாக



அந்த மாட்டை ஜோடித்தார்கள். அவன் அதிலே ஏறி 18 மேள வாத்தியங்கள் முழங்க ஊர் பவனி வந்து எல்லாத் தெருக்களையும் சுற்றி வந்தபின், 'நாம் கட்டிய சுவர்க்கலோகத்திற்கு கொண்டு போங்க'ளென்று உத்தரவு செய்தான்.

அதுபோல, அவனுடைய காலாட்கள், மாட்டை திருப்பி சுவர்க்கலோகத்து வாசல் முகப்பில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அப்போது அவன் மாட்டை சுவர்க்கலோகத்திற்கு முன்னே கொண்டு போக மாட்டைத் திருப்பி, ஒருகால் வெளியிலும் ஒருகால் வாசற்படியிலு மிருக்கும்போது அந்த மாடு துள்ளிக் கீழே அவனை தள்ளி போட்டு விட்டது. அவனுடைய ரூஹை இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் கைப்பற்றிக் கொண்டு போனார்கள். உடனே அந்தச் சுவர்க்கலோகமும் எவர் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போய் விட்டது.

இன்னும் அநேக தங்கம் பொன் வெள்ளி இவைகளைச் சேகரஞ் செய்து, அவன் சுவர்க்கலோகம் போகிறதற்கு முந்தி இந்த பணங்களை என்ன செய்தானென்றால் கல்லினால் சில கட்டிடங்கள் கட்டி அதற்குள் சுரங்கங்கள் வைத்து மண்ணாலானபட்ட தாளியில் 70,000 தாளியில் திரவியங்களை போட்டு 10 இடங்களில் கெட்டியாக புதைத்து வைத்தான். ஒரு தாளியில் போட்டிருக்கும் தங்கங்கள் 20,000 காசுகளாக யிருக்கும். ஒவ்வொரு காசுகளுடைய விலையாகிறது 55-ரூபாய் விலையா யிருக்கும், ஆகா! எப்பேர்ப்பட்ட சுகங்களை அனுபவித்தும், கோடான கோடி திரவியங்களை செலவு செய்தும், நவீனம் பொருந்திய சுவர்க்கலோகங்கட்டி என்றைக்கும் அதிலே இருந்து அனுபவிக்கலாமென்று எண்ணினானே ஒரு நாளாவது அந்த வீடு, அவனுக்கு அனுபவிக்க இடங்கொடுக்க வில்லையே! ஜனங்களே நீங்கள் சேகரம் செய்த பணம் காசு உங்களுக்கு என்ன பலனைக் கொடுக்கப் போகிறது. அல்லாஹ்வுடைய வீடுகளை நீங்கள் பேணாமல் போட்டு விட்டு, நீங்கள் இருக்கும்படியான வீடுகளை அநேக திரவியங்களைச் செலவு செய்து கட்டினீர்களே, நீங்கள் மவுத்தாகி நரக வேதனையில் இருக்கும் போது ஜபானிய என்ற மலக்குகள் நெருப்பு சுத்துமாத்தடிகளைக் கொண்டு அடிக்கும்போது, தேள், கட்டுவாக்காளி, பாம்புகள் கொத்தி பிடுங்

கும்போது நீங்கள் கட்டிய வீடுகளும் நீங்கள் சேகரஞ் செய்த பணங்காசுகளும் வந்து உங்களுக்கு நேரிட்ட அதாபுகளை நீக்கி வைக்குமா? நீங்கள் பூலோகத்தில் இருக்கும்போது உங்களுக்கு பணம் காசு அதிகமா யிருந்தால் உங்களால் இயன்ற மட்டுக்கும் அல்லாஹ்வுடைய வீடு ஒன்று கட்டினால் இதற்குப் பதிலாக, ரஹ்மான் உங்களுக்கு மேலான பதவியாகிய சுவர்க்கலோகத்தில் ஒன்றுக்கு 70-வீடு கொடுப்பான். ஒவ்வொரு வீட்டிலும் 100-ஹூருல்ஈன் பெண்களும் கொடுப்பான். அந்தந்த வீடு களில் நீங்கள் போய் இருந்து, நீங்களும் ஹூருல்ஈன் பெண் களும் ஊழி ஊழி காலம் வரைக்கும் ரொம்பவும் ராஹத்தாகவும், ரொம்ப குளிர்ச்சியாகவும் ரொம்ப சுகண்டியாகவும், என்னாளும் சுபசோபனங் கொண்டாடிக் கொண்டு இருப்பீர்கள்.

மூமின்களே! நீங்கள் பூலோகத்தில் மதிமோசம் போகாமல் நல்ல அமல்களைச் செய்து, கோடான கோடியாக நன்மைகளை பெற்றுக் கொள்வீர்களா. நன்மைகளை பெறுகிற பேர்கள் தான் சுகத்தை அடைவார்கள். நன்மைகளை பெறாத பேர்கள் ஒரு பலனுங் கிடையாமல் நரகவாசிகளாகி, கைசேதப் பட்டவர்களா இருப்பார்கள். இந்த துனியாவில் இருந்துதான் நாம் நன்மை யைச் சம்பாதிக்க வேண்டும். முதாவது நன்மை தொழுகை யாக யிருக்கும். அந்தத் தொழுகையை பேணுதலாக எடுத்து வர வேண்டும். இந்தத் துனியாவுடைய வாழ்க்கையாகிறது, ஒரு அல்ப கோத்து வாழ்வென்பது தெரியவில்லையா? எல்லாவற் றையும் நீங்கள் உணர்ந்து நன்மைகளைத் தேடி நல்அமல் செய் வீர்களா!

ஆது மகன் ஷத்தாது சுவர்க்கங் கட்டிய கிஸ்ஸா

முற்றுப் பெற்றது.

பிஸ்மில்லா ஹிர் றஹ்மா னிர் றஹீம்.

இஃது

ஹஜ்ரத்து அமீறுல் முஃமினீன் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்
லாஹு அன்ஹு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
அறபு பைத்தை "லிவாவுல் இஸ்லாம்" பத்திராதிப
ராகிய ஹாஜ்ரத் மவுலவி, ஹாஜி

ஷெய்குமீறுன் முஹ்யித்தீன் ஸாஹிபவர்களால்

தமிழிலியற்றிய

# முறுது ஹாவலில் ஆகும் முனாஜாத்து

அறபு பைத்து

ஜுத்லி ஆத்பிக்க யாஇலாஹி மன் லஹுஸாதுன் நலீல்
முப்லிஸுன் பிஸ்ஸித்கி யஃதீஇன் பாபிக்க யாஜலீல்

பொருட் கவி

ஆனவருஞ் சாவதாவென்னு மமல் குறைந்த பாவிநான்
ஓவனரு மூண்மை கொண்டு வுந்தன்வாசல் வந்தால்
மோவனருங் கிருபையோடு கொடைகொடுத்து நீ யெனக்கு
பூவனரு கருணுதவி புரிந்தருவாய் யாஜலீல. 1

அறபு பைத்து

இன்னலீ தன்பன் அலீமன் பக்பிரி தன் பல் அலீம்
இன்னனீஷக்ஸுன் ரரீபுன் முதுனிபுன் அப்துன் நலீல்.

பொருட் கவி

வாமேவு மந்தனுக்கு வலியபாவ மிகுதியுண்டு
தீமேவு மலைகளைநீ தீர்த்தருள்வா யென்கோவே
தாமேவு பாவியான தன்னடிமை பையனுக்கு
தேமேவு நற்கருணை செய்தருள்வாய் யாஜலீல். 2

அறபு பைத்து

மின்ஹு இஸ்யானுன் வுனிஸ்யானுன் வஸ்ஹ்வுன் பஅதமா
மின்க இஹ்சானுன்வபஸ லுன் பஅத இஃதா யில்ஜலீல்.

பொருட் கவி

மருவனைக்க பாவிதன்னில் மறதிமாற்றுத் தவறுதவறு
முருவணைத்து கொண்டு நின்று வோதுகின்ற வடியனுக்கு

பெருவனைத்து நன்கொடையும் பேருதவி வரிசைகளுந்
திருவணைந்து செய்வதுடன் ஜெயம் தருவாய்யாஜலீல். 3

அறபு பைத்து

கால யாறப்பீ துனூபி மிதுல றம்லின் லா யுஅத்து
பஅபு அன்னீ குல்ல தன்பின் பஸ்பஹிஸ் ஸப் ஹல்ஜலீல்

பொருட் கவி

வேங்கையுறு மடிமையான விள்ளுகின்ற தொண்டனுக்கு
எங்கையுறும் பாவந்தான் எண்ணிறந்த மணல் போல
பங்கையுறாம் பாவியின்மேல் பற்றிபூண்டு கொள்வதினால்
புங்கையுறு மவைகளை நீ பொறுத்தருள்வாய் யாஜலீல். 4

அறபு பைத்து

ஆபினீ மின் குல்லி தாயின் வக்லி அன்னீ ஹாஜத்தீ
இன்னஸி கல்பன் ஸகீமன் அந்த மன் யஷ்பில் அலீல்.

பொருட் கவி

கடுமையான பிணிகளை நீ கருணையோடு நீக்கிவைத்து
மடமையான வென்மனதை மணமதாக்கி வைத்தெந்தன்
கெடுமையான காட்டங்கள் நிறைவியற்றி தந்தியல்பாய்
மிடுமையான துன்பங்கள் விரட்டிடுவாய் யாஜலீல். 5

அறபு பைத்து

கய்ப ஹாதி யாஇலாஹீ லய்சலீ கய்ருல் அகல்
ஸஉவுஅ அமாலீ கதீருன் ஸாதுதா அதி கலீல்.

பொருட் கவி

கோர்பெரும் பாவியென்னுங் கொடியன்கெதி யெவ்விதமோ
சீர்பெருகு நற்கிரியை சிறுவனுக்கு வொன்றுமில்லை
பார்பெருகுத் துர்க்கிரியை பையனுக்கு மிகுதியுண்டு
ஏர்பெருகு லங்குறைந்த வெனக்கருள்வாய் யாஜலீல். 6

அறபு பைத்து

குல் லிநாரின் உப்றுதீயா றப்பிபீ ஹக்கிகமா
குல்தஹா யா நாருகூனீ அந்த பீஹக்கில் கலீல்.

பொருட் கவி

பங்கையுறு நெருப்புக்குநீ பகர்ந்திடுவாய் வல்லவனே
அங்கையுறு மந்நெருப்பு வடியன் ஹக்கில் குளிர்ந்திடவே



சங்கையுறு மூக்தன் கலீல் ஹக்கில் நீயுஞ் சொன்னதுபோல்
செங்கையுறு மென்ஹக்கிலுஞ் செய்தருள்வாய் யாஜலீல். 7

அறபு பைத்து

அந்த ஷாபீ அந்தகாபீ பீமுஹிம்மாதில் உமூர்
அந்தறப்பீ அந்தஹஸ்பீ அந்தலீ நிஃமல் வகீல்

பொருட் கவி

நேர்பொருந்து நாயகனே நீயேஷாபி நீயேகாபி
நேர்பொருந்து நாயகனே நீமுஹிம்மா தில்உமூரி
நேர்பொருந்து நாயகனே நீயேஹஸ்பி நீயேறப்பி
நேர்பொருந்து மெனக்கு நல்ல நீயே வக்கீல் யாஜலீல். 8

அறபு பைத்து

றப்பி ஹப்லீ கன்ஸ பஃலிக அந்த வஹ்ஹாபுன் கரீம்
அஃநினீ மாபீ லமீரி துல்லனீ கைறத் தலீல்.

பொருட் கவி

யாக்கரீமே யுந்தனிட மிருக்கும் புதையல் வரிசைகளை
யாக்கரீமே நன்கொடையா யீந்தெனக்கு கைப்பொருளாய்
யாக்கரீமே தந்தியல்பா யெழிலான நல்லவிலை
யாக்கரீமே காடிவைத்து வெனக்கருள்வாய் யாஜலீல். 9

அறபு பைத்து

ஹப் லனா முல்கன் கபீரன் நஜ்ஜினா மிம்மா நகாப்
றப்பனா இத் அந்தகாஜி வல்முனாஜீ ஜப்றயீல்

பொருட் கவி

யாயிலாஹி பெருக்கமாக வெங்களுக்கு ராஜ்யத்தை
யாயிலாஹி நன்கொடையா யீந்தெங்க ளச்சங்களை
யாயிலாஹி நீக்கிவைத்து நீயேராஜி யானபோது
யாயிலாஹி ஜிபுரியீலு மிறங்கிடுவார் யாஜலீல். 10

அறபு பைத்து

அய்ன மூஸா அய்ன ஈசா அய்ன யஹ்யா அய்ன நூஹ்
அன் தயா ஸித் தீரு ஆஸி துப் இல்லல் மவ்வல்ஜலீல்

பொருட் கவி

ஏர்பெருகு மூசாவெங்கே யினியஈசா எஹ்யா வெங்கே
பேர்பெருகு நூஹுவெங்கே பெரும்பாவிசித்திகே நீ
சேர்வருந் தவுபாவை கெடியோன்பாற் செய்திடுவாய்
சீர்பெருக நீயெனக்கு ஜெயமருள்வாய் யாஜலீல். 11

துஆ வேண்டுதல்

அருள்வளரு மாலசபி யவர்கள் தோழர் நுதற்கலிமா
அருள்வளரு மபீக்க ரருளிநின் பொருட் சொன்ன
அருள் வளருஞ் ஷெய்குமீரா னடிமைமுஹிநீ னுல்கிளைக்கும்
அருள்வளரு மிதையோது மனைவருக்கு மருள், ஆமீன். 12

"முருது ஹாஸில் ஆகும் முனாஜாத்து"
முற்றுப் பெற்றது.

---

## ஈமான் ஹாஸில் ஆகும் முனாஜாத்து

அறபு பைத்து

இலாஹீ லஸ்து லில்பிர் தவ்ஸி அஹ்லா
வலா அக்வா அலா காரில் ஜஹீமி
பஹப்லீ தவ்பத்தன் வக்பிர் துனூபீ
பயின்னக்க காபி ருத் தன்பின அளீமி

பொருட் கவி இன்னிசை

பார்வளரு மென்னை யன்பாய்ப் படைத்தாளு மென்கோவே
கார்வளரும் பொற்ப திக்கு நான் தகுதி யானுமல்ல
ஆர்வளருஞ் ஜஹீமென்னுந் துன்ப நரக நெருப்பதனை
ஏர்வளரு நான் தாங்க வெக்த னக்கோ வலுவில்லை
பூமேவுங் குற்ற மெல்லாம் பொறுத்தாளும் நாயகனே
பாமேவு மென்னுடைய பாவங்களை நீபொறுத்து
நாமேவுந் தவ்பாவை நன்கொடையா யெப்பொழுதுந்
தாமேவு நீயெனக்கே தந்துதவி செய்தருள்வாய்.

முனாஜாத் சொன்னவர்கள்

திருவளரு முனாஜாத்தை நிணைஹயாத் தாக்கி வைத்த
திருவளரு முஹையதீன் சீர்குதுபு முதியசேயர்
திருவளரு மப்துர்ரஜாக் செப்பியதாய் வள்ளலிமாம்
திருவளரு மப்துல்வஹாப் சேராணி யெடுத்துரைத்தார்.

ஈமான் ஹாஸில் ஆகும் இனிய முனாஜாத்து
முற்றுப் பெற்றது.

---

Printed at Shahul Hameedia Press, Madras.